Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 19 வெள்ளிக்கிழமை (05.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 066

## போக்குவரத்து சேவையை மேலும் வலுப்படுத்த முயற்சி



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட தனியார்- இலங்கை போக்குவரத்து சபை ஆகியவற்றுக்கிடையில் ஏற்படுகின்ற போக்குவரத்து, வழித்தடம் போன்றவற்றில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் ஆராயப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மேற்படி இரண்டு தரப்புகளுக்குமிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதோடு. (19) ஆம் பக்கம் பார்க்க

## மறுக்கப்பட்ட உரிமைகளை பொன்சேகாவுக்கு வழங்குவேன்

### மைத்திரி சொல்கிறார்





தர்ம் ஆட்சிக்கு வந்ததும். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகர்விற்கு அனைத்து வரப்பிரசாதங்களும் மீண்டும் வழங்கப்படும் என்று எதிரணியின் பொது வேட்பாளர். மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கொழும்பில் சரத் பொன்சேகாவுடன் இணைந்து செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளை வேதனையுடன் வேடிக்கை பார்க்க நேரிட்டது.

சரத் பொர்ன்சேகா மீதான சித்திரவதைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற ரீதியில் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த அநீதிகளுக்கு எதிராக போராடக் கூடிய சக்தி இருக்கவில்லை. எதிர்காலத்தில் சரத் பொன்சேகாவை விடவும் மோசமான பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க நேரிடும். எனினும் (19) ஆம் பக்கம் பார்க்க

# வடக்கு மாகாண சபையில் வெளிப்படைத்தன்மை வேண்டும்

## நேற்றைய அமர்வில் போர்க்கொடி

(யாழ்ப்பாணம்)

அமைச்சரவைத் தீர்மானங்களை எங்களுக்கு தெரியப்படுத்தாவிட்டால் அடுத்த ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை வாக்கெடுப்புக்கு விட்டு வாக்களிக்க வேண்டிய நிலை ஏற்படும் என தெரிவித்து ஆளும்கட்சி உறுப்பினர்கள் நேற்று வடமாகாண சபையில் போர்க்கொடி எடுத்தனர்.

அடுதததஆண்டுக்கான நிதிக் கூற்று நேற்று முதலமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அதில் தலைப்புக்கள் ரீதியாக தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களின் உள்ளார்ந்த செலவீனங்களை விரிவாக அவையில் சமர்ப்பிக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கோரிய நிலையில் அவையில், அமைச்சரவையில் தெரிவிகக்கும் விடயங்களை எமக்கு தெரியப்படுத்த வேண்டும் என பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெயநாதன், சர்வேஸ்வரன், விந்தன் கனகரத்தினம் போன்றோர் தமது அதிருப்தியை வெளியிட்ட நிலையில் நாடாளுமன்றில் கூட அவைத் தீர்மானங்களை உடனுக்குடன் வெளியிடும்போது இங்கு மட்டும் அமர்வுக்கு முதல் நாள் நடாத்தப்பட்டு தீர்மானங்களை உடனடியாக வெளியிடமுடியவில்லை என தெரிவிக்கும் புலுடா எல்லாம் இங்கு சரிவராது அவ்வாறு தொடருமானால் வரவு செலவுத்திட்டம் வாக்கெடுப்புக்கு விடவேண்டிய நிலை ஏற்படும் என எச்சரித்தார் சிவாஜிலிங்கம். இதற்கு அவையில் இருந்த பெரும்பாலான ஆளும் கட்சி உறுப்பினர் (19) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்களின் உண்ணா நோன்பு நிறைவு

### விடுதலைக்கு ஏற்பாடு

யாழ்.சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் கடந்த மூன்று தினங்களாக மேற்கொண்டு வந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று பிற்பகலுடன் முடிவுக்கு வந்தது. பிற்பகல் 3. மணியளவில் யாழ். சிறைச்சாலைக்குச் சென்ற இந்தியத் துணைத் தூதரகத்தின் பிரதித் துணைத் தூதர் எஸ்.டி.மூர்த்தி உள்ளிட்ட குழுவினர் அவர்களுடன் நடத்திய பேச்சுவார்தையை அடுத்து உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வந்தது. கொழும்பிலுள்ள தூதரகத்துடன் பேசி மீனவர்களை விடுதலை செய்வ (19) ஆம் பக்கம் பார்க்க

## தூக்கி வீசப்பட்டது செங்கோல்; வடக்கு மாகாணசபையில் களேபரம்

(யாழ்ப்பாணம்)

இனப்படுகொலை தொடர்பான பிரேரணை முன்மொழியப்படவேண்டும் எனக் கோரி வாக்கெடுப்பு நடத்துமாறு அடம்பிடித்த சிவாஜிலிங்கம் அவைத் தலைவரின் மறுப்பையடுத்து அவை நடுவே வைக்கப்பட்டிருந்த செங்கோலை அடித்துத் தூக்கி எறிந்ததைத் தொடர்ந்து அவையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

நேற்றுக்காலை வடமாகாண சபையின் அமர்வு ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிரேரணைகள் 4 முன்மொழியப்பட்டு வழி மொழியப்பட்ட நிலையில் எனது பிரேரணைக்கு என்ன கதியென கேட்ட சிவாஜிலிங்கத்திற்கு இது விடயம் தொடர்பாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைமைப்பீடன எண்மர் குழுவிடம் தொடர்பு கொள்ளுமாறு அவைத்தலைவரினால் தெரிவிக்கப்பட்ட நிலையில் அவையில் யாரும் எதிர்ப்புத் தெரிவிக்காது சிவாஜிலிங்கத்திற்கு ஆதரவாக இருந்த நிலையில் த.தே.கூ.வின் உத்தரவையும் மீறி சிவாஜிலிங்கத்தின் பிரரணை அவையில் முன்மொழியப்பட்ட நிலையில் அதை எதிர்ப்பதாக (19) ஆம் பக்கம் பார்க்க

## முஸ்லிம் காங்கிரஸ்டன் அமைச்சர் பஸில் முக்கிய சந்திப்பு இன்று

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவுக்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்று இன்று வெள். (19) ஆம் பக்கம் பார்க்க

## பொன்சேகாவை ஆதரித்தவர்கள் இனப்படுகொலை பற்றி பேசலாமா?

### எதிர்க்கட்சித்தலைவர் தவராசா கேள்வி



(யாழ்ப்பாணம்)

சரத் பொன்சேகா வேட்பாளராக தேர்தலில் நின்றபோது அவரை ஆதரித்தவர்கள், வாக்களிக்கச் சொன்னவர்கள் இன்று இனப்படுகொலை பற்றி பேசுவதில் என்ன நியாயம் இருக்கின்றது.

இது இனப்படுகொலைக்கான வரைவிலக்கணத்திற்குள் முரணானது என குற்றம் சுமத்தினார் வடமாகாணசபையின் எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா.

இனப்படுகொலை என்பது சாதாரணவிடயம் அல்ல அதனை ஆழமாக ஆராய்ந்து பேசவேண்டும் இதற்கு கால அவகாசம் தேவை அந்த நேரம் ஆட்சியில் இருந்தவர்கள் யார் அந்த ஆட்சியில் இருந்தவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வர ஆதரித்துள்ளார்கள் இவை நன்கு ஆராயப்படவேண்டும்.

இனப்படுகொலை தொடர்பான பிரேரணை ஆராயப்படவேண்டும் எல்லோரும் அரசியலமைப்புக்கு விசுவாசமாக இருப்போம் என சத்தியம் செய்து தான் வந்திருக்கிறோம்.

அரசியலமைப்புக்கு விசுவாசமாக இருக்க (19) ஆம் பக்கம் பார்க்க



# இராமநாதன் கல்லூரிக்கு புதிய கட்டடம்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு அடுத்த ஆண்டு மூன்று மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்ப கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் கல்லூரி மேம்பாடு தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இக்கல்லூரியில் நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த சுண்ணாம்புக் கட்டடங்கள் இருப்பதாகவும் அவற்றினால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகளை கருத்தில் கொண்டு புதிய கட்டடங்களை நிர்மாணிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3596)


## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | PROGRAM NAME |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 09.55 | காலை செய்தி |
| Am 10.00 | HELLO DD |
| Am 10.30 | I.T.Com |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | ஆரோக்கியமான வாழ்வு |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | "மழை" சுப்பர் திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | "சக்தி" திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

## பாராட்டு விழா

யாழ்.கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் இ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தன், ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தா வி.மயூரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2888 திகதி 03-12-2014

ஆங்கில எழுத்து: G

வெற்றி எண்கள்: 16 23 55 67 போனஸ் இல: 03

ஜக்பொட் பரிசு ரூ.21,233,650/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 216858 | 20/- | 4,337,160/- |
| 2 இல | 15417 | 100/- | 1,541,700/- |
| 3 இல | 317 | 1,000/- | 317,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8542 | 40/- | 341,680/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 627 | 1,000/- | 627,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 15 | 10,000/- | 150,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 21,233,650/- | - |
| 1 இல + போனஸ் இல | 10304 | 100/- | 1,030,400/- |
| 2 இல + போனஸ் இல | 480 | 500/- | 240,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 415 | 200/- | 83,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 23 | 1,500/- | 34,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 253004 | | 11,102,440/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 21,824,425/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3919)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# INVITATION FOR BIDS

1. **The Chairperson, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| No | Bid ID | Description of Work | Estimated Cost ( Rs. In million) | Contract Period (Number of Calendar Days | Minimum Required ICTAD Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| 1 | YA/CWP/RE/ 2015-03 | Repairs and Renovations to Natural Science Block Stage-I, University of Jaffna. | 21.5 | 120 | C5or above | Rs. 200,000 | 22[nd] April, 2015 |
| 2 | YA/CWP/RE/2015-04 | Construction of Toilets for Vithiyanantham Library of the University of Jaffna. | 4.5 | 90 | C8 | Rs. 45,000 | 22[nd] April, 2015 |
| 3 | YA/CWP/RE/2015-05 | Renovation of Dean's Office at Faculty of Management Studies and Commerce, University of Jaffna. | 2.6 | 45 | C8 | Rs. 25,000 | 22[nd] April, 2015 |
| 4 | YA/CWP/RE/2015-06 | Wash Room to Staff Quarters (3Nos) at Ariviyalnagar, Kilinochchi, University of Jaffna. | 1.8 | 60 | C8 | Rs. 18,000 | 22[nd] April, 2015 |
| 5 | YA/CWP/RE/2015-07 | Fencing for Cattle and Poultry Shed at Faculty of Agriculture, University of Jaffna at Ariviyalnagar, Kilinochchi. | 1.8 | 45 | C8 | Rs. 18,000 | 22[nd] April, 2015 |
| 6 | YA/CWP/RE/2015-08 | Completion of Balance work of Fisheries Laboratory, Renovation of Insectory Block, and Improvements and Painting for Specified lecture halls, University of Jaffna at Thirunelvely | 8.7 | 60 | C7 | Rs. 85,000 | 22[nd] April, 2015 |
| 7 | YA/CWP/AG-KLN/2015-8 | Installation of Direct Lightening Protection System, Laboratory Taps and Aluminium Partition at Faculty of Agriculture, Ariviyalnagar, Kilinochchi. | 10.6 | 60 | C6 / EM2 | Rs. 100,000 | 22[nd] April, 2015 |
| 8 | YA/CWP/RE/2015-09 | Construction of Vehicle Parks for Hostels and Faculty of Agriculture at Ariviyal Nagar, Kilinochchi. | 4.5 | 60 | C8 | Rs. 45,000 | 22[nd] April, 2015 |
| 9 | YA/CWP/RE/2015-10 | Construction of Panel Room at Four storied Hostel, University of Jaffna at Thirunelvely | 1.8 | 60 | C8 | Rs. 18,000 | 22[nd] April, 2015 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction/ Electrical & Mechanical services with the Institute for Construction Training and Development (ICTAD) as indicated in the above table.

4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the above table.

5. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.

6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna from 5[th] December, 2014** until **22[nd] December, 2014** from **9.00 hrs to 15.00 hrs** upon payment of a non refundable fee of **rupees one thousand five hundred (Rs.1500/-) for each bid for works No. 2, 3, 4, 5, 8 & 9 and rupees two thousand (2000/-) for works No. 1, 6 & 7.**

7. Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Registrar's office to reach on or before 14.00 hrs on the 23[rd] December 2014.** Bids will be opened immediately thereafter **on 23[rd] December 2014** in the Board room of the University in the presence of the bidders' representatives who choose to attend.

8. Bids shall be valid for a period for **90 days** from the date fixed for closing of Bids or any extend period.

9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in Section 09 in the Bidding document.
   - For the amount as indicated in the above table.
   - In favour of "Vice Chancellor, University of Jaffna."
   - Issued by one of the agencies indicated in the clause 16 of ITB of the schedule.

10. Pre Bid meeting will be held at Board room, University of Jaffna at 10.00 hrs on the **17[th] December, 2014 for the works No. 1, 2, 3, 6 & 9** and at the Board room of the Faculty of Agriculture at Ariviyal Nagar, Kilinochchi at 10.00 hrs on the **18[th] December, 2014 for the works No.4, 5, 7& 8.**

**Chairperson, Procurement Committee,**
**University of Jaffna,**
**Thirunelvely,Jaffna.**

**04.12.2014**

(C/3918)

JSAC
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
ஊடகங்களின் வளர்ச்சிப் பொருளில் வலுவற்றவர்களாய் மட்டுமல்லாமல், உலக வரலாற்றில் உலாவருகின்ற காவியப் பெண்களாய் சாதனை படைக்கச் செய்திடுவோம்.
16
2014

# வாழ்க்கையில் வெற்றி இலக்கை அடைய நல்ல கருத்துக்களை கேட்கவேண்டும்

## பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி ஓய்வு பெற்ற அதிபர் தெரிவிப்பு

(அச்சுவேலி)

பயனுறுதியுள்ள நன்மை பயக்கக்கூடிய நல்ல கருத்துக்களை யார் குறிப்பிட்டாலும் அதிலுள்ள அர்த்தத்தினை அறிந்து அதற்கமைய செயற்படுவோமானால் வாழ்கையில் வெற்றி இலக்குகளை இலகுவாக அடைந்து விட முடியும். பெரியவர்கள் மட்டும் தான் நல்ல கருத்துக்களை முன்வைப்பார்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருக்காது சிறுவர்களானாலும் அவர்கள் முன்வைக்கும் கருத்துக்கள் காத்திரமானவையாக அமையுமாயின் அவற்றைப் பின்பற்றுவதில் தவறேதும் இல்லை என கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் த.முத்துக்குமாரசாமி தெரிவித்துள்ளார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பிரதி அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுச் சென்றுள்ள சி.சிவலிங்கத்தின் மணிவிழா நிகழ்வு அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்றபோது அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

நமது முன்னேற்றத்திற்காக முன்மொழியப்படும் கருத்துக்கள் நல்ல பலனைத் தருமாயின் அவற்றைப் பின்பற்றி ஒழுகுவது நன்மையினையே தரும். எம்மில் பலர் மற்றவர்களின் கருத்துக்களுக்கு இடமளிப்பதில்லை. இது எமக்குள்ளே குடிகொண்டிருக்கும் தாழ்வுணர்ச்சியின் வெளிப்பாடு என்று தான் கூறவேண்டும். அமெரிக்காவின் புகழ்பூத்த ஜனாபதிகளில் ஒருவரான ஆபிரகாம் லிங்கன் பல தோல்விகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்த வேளையிலும் வயது வேறுபாட்டைப் பார்க்காது ஓர் சிறுமியின் கருத்திற்கு செவி சாய்த்ததினால் தான் அவரால் ஜனாதிபதியாக முன்னிற்கு வர முடிந்தது. இவ்வாறு உலக வரலாற்றின் பல சம்பவங்களை எடுத்து அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

புகழ்பூத்த பேரறிஞர்கள் ஆனாலும் சரி உலகப் பெரியார்கள் ஆனாலும் சரி அவர்களின் வாழ்க்கைக்குப் பின்னால் பல மகத்தான அர்த்தங்கள் பொதிந்துள்ளன. அதே போல் நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்நாளிலும் எமது வாழ்க்கையினை அர்த்தமுள்ளதாக்கும் வகையில் நேர்மையுடனும், கடமையுணர்வுடனும் செயறபடவேண்டும்.

அதுவே நாம் நமக்காகத் தேடிக்கொள்ளும் பிறகாலச் சொத்தாகும். கல்வி என்றும் அழிவில்லாதது. அதை யாராலும் கவர்ந்து செல்ல முடியாது. கல்விக்கான அத்திபாரம் இளம்பருவத்தில் இடப்பட வேண்டும் பின்னர் அது வயது முதிர்ச்சியுடன் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றார். (03)



கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்த கலைவிழாவினையும் பரிசளிப்பு விழாவினையும் முன்னிட்டு நேற்றுமுன்தினம் பெற்றோர்கள் சிரமதானப்பணிகளில் ஈடுபட்டபோது... (51)

# மாற்றுத்திறனாளியான நான் சாதிக்கும் போது ஆரோக்கியமான உங்களால் ஏன் முடியாது

## கேள்வி எழுப்புகிறார் நிமால்

காலில்லாத என்னால் சாதிக்க முடிகின்றது என்றால் கால்கள் உள்ள உங்களால் ஏன் சாதிக்க முடியாது என்று கேள்வி எழுப்பியுள்ளார் மாற்றுத்திறனாளியான நிமால். யாழில் இடம்பெற்ற மாற்றுத்திறனாளிகள் தின அனுஷ்டிப்பில் கலந்து கொண்டு தனது பாட்டுத் திறமையை வெளிப்படுத்திய பின்னர் வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய மாற்றுத்திறனாளிகள் தினத்தில் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். 2008 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வன்னி யுத்தத்தின் போது ஷெல் விழுந்து எனது கால் துண்டாடப்பட்டது. நான் இந்த கால்களை இழந்ததற்கு பிறகு அண்மையிலே வலியின் வரிகள் என்ற காணொளி இறுவட்டை வெளியிட்டிருந்தேன். அது என்னுடைய வாழ்வின் துன்பங்கள் தொடர்பிலானது. அதனை வெளியிட்டதில் எனக்கு வெற்றிகளும் கிடைத்தன.

இதனை வெளியிட்டதன் நோக்கம் நிறையப் பேருக்கு காலுள்ளது, கையுள்ளது, மனதால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் நான் உடலால் மட்டும் தான் பாதிக்கப்பட்டுள்ளேன். கால் இல்லாத என்னால் முடியும் என்றால் கை, கால்கள் இருந்தும் தன்னம்பிக்கையில்லாமல் செயற்படுபவர்களை விழிப்பூட்ட துணிந்தேன். நண்பர்களுடன் இணைந்து இந்த முயற்சியில் இறங்கி வெற்றியும் கண்டேன்.

இந்த வலியின் வரிகள் என்ற காணொளி இறுவட்டுக்கு ஜனாதிபதி விருதும் கிடைத்தது என்றார்.

# பாடசாலைகளா? அரசியல் கூட்டங்களா?

### வடபுலத்தான் எழுதுவது...

வடமாகணத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் இப்பொழுது அரசியல் கூட்டங்களாகியுள்ளன. இது ஒரு விசக்காய்ச்சலைப் போல எல்லா இடங்களிலும் ஒரு குறுகிய காலத்தில் பரவியுள்ளது.

வடமாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட கையோடு தொடங்கிய இந்த விசக்காய்ச்சல் இப்பொழுது வடமாகாண சபையின் நிர்வாகம் செயற்படத்தொடங்கிய பிறகு உச்சத்துக்கு வந்து முத்திப்போயிருக்கிறது.

இதனால், எல்லாப்பாடசாலைகளிலும் ஆசிரியர்களில் ஒரு அணி எதற்கெடுத்தாலும் அரசியலுக்கூடாகவே எல்லாத்தையும் செய்ய முற்பட்டுக்கொண்டிருக்கும் போக்கு உருவாகியுள்ளது.

பாடசாலைகளில் மாணவத் தலைவர் தெரிவு தொடக்கம் பரிசளிப்பு விழாவை நடத்துகின்ற முறைவரையில் எல்லாம் அரசியல் ரீதியாகத்தான் நடக்கிறது.

மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பு எல்லாவற்றிலும் ஆளுநர் தலையிட்டுக்கொண்டிருக்கின்றார் என்று சொல்லி, விமர்சனம் செய்த பத்திரிகைகளும் கல்விப் புலத்தினரும் இப்பொழுது இதற்கெல்லாம் என்னதான் சொல்லப்போகிறார்கள்?

பாடசாலை நிகழ்வுகளில் அரசியலை கலக்கக்கூடாது என்று சொல்லுகின்ற இதே ஆசிரியர்கள் மாணவர்களை தேர்வுக்கா தயார்ப் படுத்துகின்றார்கள்? தங்களுடைய விருப்பத்திற்குரிய அரசியல் வாதிகளுக்கு சார்பாக நடக்கவைக்கிறார்கள்.

இதைப்பற்றி யாராவது கதைக்கப்போனால், பாடசாலைகளில் அரசியல் கலப்பதை நாங்கள் விரும்பவில்லை.

நாங்கள் அரசியலுக்குச் சார்பாக நடக்கக்கூடாது என்று கரடி விடுகிறார்கள், காதில் பூ வைக்கிறார்கள்.

அண்மையில் ஒரு பாடசாலையில் நூல் வெளியீடு நடந்தது. அதற்கு அழைக்கப்பட்டவர்களைப் பார்த்தால் அத்தனையும் தமிழரசுக்கட்சியின் ஆட்கள்.

“இது சுத்தமான அரசியல் தெரிவுதானே”

என்று ஆதாரத்துடன் கேட்டபோது “இது மாணவர்களின் தெரிவு என்று ஒரு ஆசிரியர் பதில் சொன்னார்.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களையும் பிரதம விருந்தினர்களையும் உங்களுக்குத் தெரியுமா? என்று ஐந்து மாணவர்களிடம் கேட்டேன்.

அவர்களுக்கு எவரையுமே தெரிந்திருக்கவில்லை. அதிலும் இப்படி அழைக்கப்பட்டவர்களில் மூன்று பேர் அந்தப் பாடசாலையுடன் ஒருபோதுமே தொடர்பில்லாதவர்கள் அந்த நிகழ்வுக்கு வரும்வரையில் அவர்களுக்கு அந்தப் பாடசாலையே தெரியாது.

இவர்களைத் தெரிவு செய்தது மாணவர்களல்ல, ஆசிரியர்கள் தான்.

தங்களுடைய சொந்த விருப்பத்துக்கு ஏற்றமாதிரித் தெரிவுகளைச் செய்துவிட்டு, அதற்கான பொறுப்பை எடுக்காமல், காரணத்தைச் சொல்ல முடியாமல் மாணவர்களுடைய தலையில் பழியைப் போட்டு, உருப்படி விடும் கோழைத்தனம் வேண்டியிருப்பது ஏன் இந்த ஆசிரியர் குழாத்தினருக்கு?

இன்னொரு சம்பவம், பாடசாலையில் அங்கே பரிசளிப்பு நிகழ்வு நடக்கவிருந்தது. அந்த நிகழ்வுக்கு யாரை அழைக்கலாம் என்ற வாதப்பிரதி வாதங்கள் நடந்து கொண்டிருந்தன.

பாடசாலையின் வளர்ச்சிக்கு பல வகையான உதவிகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரும் அரச தரப்பும் செய்திருந்தது.

ஆனால், பாடசாலையின் ஆசிரியர் குழாமில் அதிகமானவர்கள் தமிழரசுக்கட்சியின் ஆதரவாளர்கள். அதிபர் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறினார்.

இறுதியில் அரசியல் தரப்பில்லாமல் நிகழ்வை நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

அப்படியென்றால் யாரை அழைப்பது?

பழைய மாணவர்கள் இரண்டு பேரை முதன்மை விருந்தினராகவும், பிரதம விருந்தினராகவும் அழைக்கலாம் என்று தீர்மானித்தார்கள்.

அப்படி அழைக்கப்பட்டவர்கள் வேறு யாருமல்ல, பிரதேச சபை உறுப்பினர்கள் இருவரும் தமிழரசுக்கட்சி ஆட்கள்.

எப்படியிருக்கிறது கலப்படமில்லாத அரசியல்?

இது மாதிரியான நடவடிக்கைகள் எல்லாம் எங்கே போய் முடியும் என்பதற்கு வரலாற்றில் ஏராளம் உதாரணங்கள் உண்டு.

நம்பிக்கை என்பது புயல் காற்றில் துவண்டு விழும் மெல்லிய மலரல்ல அது அடிபெயரா இமயம் போன்றது. - காந்திஜி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ஆராயக் கூடாது; அனுபவிக்கணும்!

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இருவருமே இனப்பிரச்சினைக்கு தாங்கள் கேட்கக்கூடிய தீர்வைத் தருவதற்குத் தயாரில்லாதவர்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருவரிடமிருந்தும் ஒதுங்கி நிற்கிறது.

அதேசமயம், ஆயுதமேந்திய தமிழ் மறவர்களை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டுமெனச் சொல்லி, இப்போதும் ஏனைய சமூகங்களுக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் விடுத்துக் கொண்டிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரைக் கிட்டச் சேர்ப்பதற்கே இருவரும் அஞ்சுகிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சேர்த்துக் கொள்ளும் கட்சியோ வேட்பாளரோ பயங்கரவாத மிரட்டல்களுக்கே துணை போகிறார் என்று அவரை ஒதுக்கிவிடுவார்கள் சிங்களப் பெரும்பான்மையினர் என்பதாகத்தான் உருவாக்கி வைத்திருக்கிறார்கள் நிலைமையை.

அவ்வாறு அனைத்து சிங்களக் கட்சிகளாலும் வெறுத்தொதுக்கப்படுவதுதான் தமிழ் வீரத்தை வெளிப்படுத்தும் சரியான தமிழ்த் தலைமை என்று தமிழ் மக்களும் நம்பவைக்கப்பட்டிருக்கிறாரகள்.

இப்படியொரு பகைவெறுப்புச் சூழலை உருவாக்கி வைத்துக் கொண்டு, ஐக்கிய இலங்கைக்குள் வாழத்தான் தீர்வைக் கேட்கிறோம் என்று உச்சநீதிமன்றிலும் போய் நாடகமாடிவிட்டுக் கள்ளச் சிரிப்போடு வருகிறார்கள் நம் விண்ணர்கள்.

அதெல்லாம் சர்வதேசத்தை மடக்குவதற்கு நம்மாட்கள் சொல்லுகின்ற ராஜதந்திர அறிக்கை; உண்மையில் மோடியை வைத்துக்கொண்டோ ஒபாமாவை வைத்துக்கொண்டோ அல்லது அவர்களுக்குப் பிறகு வருகிறவர்களை வைத்துக்கொண்டோ தனிநாட்டைப் பிரித்து எடுத்துவிடும் ஒரு நீண்டகால ரகசியத் திட்டத்தோடுதான் தலைவர்கள் அலுவல் பார்த்து வருகிறார்கள் என்று தமிழ் மக்கள் நம்பவைக்கப் படுகிறார்கள்.

"அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இவ்வளவுநாள் போய் விரிவாக விளக்கியும் எங்கள் பிரச்சினை அவர்களுக்கு விளங்கவில்லை என்றால், நமக்கு ஐநா•மனித உரிமைப் பேரவை இருக்கிறது. குற்ற விசாரணையை நடத்தி மகிந்தவை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டால், அதன்பிறகு இங்கே நாங்கள் நினைத்த தீர்வுதான்...

இப்போ இதிலும் ஒரு சிக்கல் வந்துவிட்டது. ஒருவேளை மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வந்துவிட்டால், அதன்பிறகு போர்க்குற்ற விசாரணையின் முடிவில் தமிழர்க்குத் தீர்வு வந்துவிடும் என்பதைச் சொல்ல முடியாமல் போய்விடும்.

மைத்திரியுடனும் பேசித் தீர்வுகாண முடியாது என்றால்... என்றாவது ஒருநாள் சர்வதேசத்திற்கு எங்கள் பிரச்சினை விளங்கும், சிங்களத் தலைவர்கள் யாரும் தனிநாட்டுக்குச் சமனான தீர்வைக் கொடுக்க மாட்டார்கள் என்பதைப் புரிந்துகொண்டு சர்வதேசம் வெகுண்டெழுந்து வரும்...

இல்லாவிடினும் எமது தமிழ் ஆய்வாளர்கள் சோழிகளை உருட்டிப் பார்த்துக் கணித்துச் சொல்லிக் கொண்டிருப்பதுபோல், அடுத்த 50 ஆண்டுகளுக்குள் எப்படியும் சீன–இந்திய–அமெரிக்க முறுகலால் மூன்றாம் உலகப்போர் வந்துவிடும்.

அப்போது அமெரிக்காவும் சீனாவும் தங்களது கன்னைக்குப் பலம் சேர்க்க இலங்கையில் தமிழர்களைத்தான் நம்பியிருக்க வேண்டும். அப்போது ஈழத்தமிழர்களாகிய எங்களது பேரம் பேசும் சக்தி மறுபடியும் உருவாகிவிடும்..."

பார்த்தீர்களா, எப்படியும் யுத்தம் ஒன்றில்லாமல் இலங்கை அரசிடமிருந்து தீர்வைப் பெறமுடியாது என்ற தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்களின் தீர்க்கதரிசனம் இப்படித்தான் நிறைவேறப் போகிறது.

மூன்றாம் உலக யுத்தம் எப்போது வரும் என்பதையோ, அந்த யுத்தத்திலும் நமக்கு நேரப்போகும் அழிவுகள் அவலங்கள் பற்றியோ, அந்த யுத்தம் முடிந்த பிற்பாடும் (நாங்கள் இருந்தால்) நமக்குத் தீர்வு வர என்ன சாத்தியம் இருக்கிறது என்பது பற்றியோ யோசிக்க முற்படுவது அசல் தமிழ்க்குணம் அல்ல.

தலைவர்கள் சொல்வதையெல்லாம் ஆராயக் கூடாது; அனுபவிக்க வேணும்!

- ஆசிரியர்

# அரசமைப்பில் பெரும் திருத்தங்கள்; ஆராய்ந்து வருகிறது அரசாங்கம்

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசமைப்பில் பெரும் திருத்தங்களை ஏற்படுத்துவது சம்பந்தமாக பரிசீலிக்கப்பட்டு வருகின்றது என்றும், இது குறித்த தான அறிவிப்பு அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியாகலாம் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். எனினும், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையில் மாற்றம் கொண்டு வரப்படுமா என்பது பற்றி அவர் தெளிவாக எதுவும் குறிப்பிடவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் புதன்கிழமை சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையில் மாற்றம் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அறியமுடிகின்றது என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு கூறினார்.

அரசின் தேர்தல் விஞ்ஞாபனம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. நிபுணர் குழுவொன்று இதற்கான பணிகளை முன்னெடுத்து வருகின்றது. அத்துடன், அரசமைப்பில் விரிவான மாற்றங்களை மேற்கொள்வது பற்றியும் அரசு பரிசீலித்து வருகின்றது. எனவே, இது குறித்தான அறிவிப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியாகலாம் என்றும் அவர் கூறினார். அதேவேளை, மாகாண சபை ஆட்சியில் அரசுக்கு எவ்வித நெருக்கடியும் ஏற்படாது என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ்டன் சுமுகமான உறவு தொடர்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ஜனாதிபதி, பிரதமராக வருவதற்கு ஆளும் கட்சியில் பலர் கனவுடன் உள்ளனர்

## என்கிறார் கபீர் ஹாசிம்

(கொழும்பு)

ஆளும் கட்சியில் பலர் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ பதவி வகிக்கலாம் என கனவு காண்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் தவிசாளருமான கபீர் ஹசிம் தெரிவித்துள்ளார்.

என்றாவது ஓர் நாள் ஜனாதிபதியாகவோ அல் லது பிரதமராகவோ பதவி வகிக்க முடியும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கனவு காண்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பதவியில் நீடிக்கும் இந்தக் கனவு மெய்ப்படாது என்பதனை நினைவில் நிறுத்திக்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் உறுப்பினர்களையே இந்த அரசியல் சாசனம் அதிகளவாக பாதித்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் உணர்ந்து கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் குடும்ப அரசியலில் ஈடுபடப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தங்கத்தை கடத்துவதற்கு பிரதான தளமாக இலங்கை

(கொழும்பு)

தங்கக் கடத்தல்காரர்கள் ஒரு புதிய வழியாக இலங்கையை பயன்படுத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளதாக, இந்திய வருவாய் புலனாய்வு இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஊடாக கொண்டு செல்லப்படும் குறித்த தங்கம் சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பல பிரதேசங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ், மியன்மார், நேபளம் மற்றும் பாகிஸ்தான் ஊடாகவும் தங்கம் கடத்தப்படுவதாக தெரியவந்துள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் அந்த நாட்டின் ஏற்றுமதி வரி அதிகரித்துள்ளதால் கடத்தல்காரர்கள் இலங்கையை பயன்படுத்தி வருகின்றனர், என இந்திய வருவாய் புலனாய்வு இயககுநரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் இலங்கை, நேபாளம், பூட்டான், பங்களாதேஷ் மற்றும் மியன்மார் உள்ளிட்ட நாடுகளின் சுங்க அதிகாரிகள் கலந்து கொள்ளும் வலய நாடுகளின் கூட்டத்தில் இது குறித்து கலந்துரையாடப்படும் என இந்திய வருவாய் புலனாய்வு இயக்குனரகம் கூறியுள்ளது.

# குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் உடன் கட்சியிலிருந்து நீக்கம்

## என்கிறார் அமைச்சர் டளஸ்

(கொழும்பு)

ஹெரோயின், எத்தனோல் வியாபாரம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டுள்ளனர் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவர்கள் உடனடியாக கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள் என அமைச்சர் டளஸ் அழகபெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் சுமத்தப்படும் குற்றச்சாட்டு சாட்சியங்களுடன் ஒப்புவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் மற்றுமொரு அமைச்சரான ஜனக்க பண்டார தென்னகோன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஹெரோயின் மற்றும் எத்தனோல் வியாபாரிகள் ஆக்கிரமித்துள்ளதாக அண்மையில் நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிடும் போதே அமைச்சர் டளஸ் அழகபெரும இதனை கூறியுள்ளார்.

அமைச்சர் தென்னகோன் கூறுவது போல் ஹெரோயின் மற்றும் எத்தனோல் வியாபாரத்துடன் தொடர்புடையவர்கள் கட்சியில் சேர்ந்திருக்கலாம் எனவும் எனினும் அவர்களிடம் கட்சியின் அதிகாரம் செல்லவில்லை எனவும் அழகபெரும மேலும் தெரிவித்துள்ளார்.

# வருடாந்த ஒளிவிழா


(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருப்பலி ஒப்புக் கொடுத்தலுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் பங்குத்தந்தை கி.யூட் நிக்சன், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் இராசநாயகம் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் தொடர்ச்சியாக மாணவர்களின் கலை நிகழ்வில் பரிசில் வழங்கல் என்பனவும் இடம்பெறவுள்ளன.





யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற முத்தமிழ் விழாவின் இரண்டாம் அமர்வில் கலாசார பண்பாட்டுடனான மாணவர்களின் அணி வகுப்பையும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆசிரிய மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம்.

## பாதிப்படைந்த கல்விச் செயற்பாடுகள்

பருத்தித்துறை வீதி, புத்தூரில் இயங்கும் கதிர் தனியார் கல்வி நிலையம் மற்றும் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம் ஆகியவற்றில் வெள்ளநீர் புகுந்துள்ளமையால் மாணவர்களின் கல்விச்செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

கடந்த சில தினங்களாக இடைவிடாது பொழிந்த கன மழையால் வெள்ள நீர் புகுந்த நிலையில் அதனை இயந்திர மூலம் மாணவர்களும் ஆசிரியர்களும் வெளியேற்றிருந்தனர். இதனால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் யாவும் ஸ்தபிதமடைந்திருந்தன.

எனினும் தற்போது மழை ஓய்ந்துள்ள நிலையில் கல்விச் செயற்பாடுகள் சிரமததின் மத்தியில் மீண்டும் வழமைக்கு திரும்பி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (85)

## மானிப்பாய் பொது நூலகத்தின் வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(மானிப்பாய்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மானிப்பாய் பட்டின பொது நூலகத்தால் போட்டிகள் நடாத்தப்பட்டன.

இப் போட்டிகளின் இறுதி முடிவுகள் மானிப்பாய் பட்டின பொது நூலகத்தின் பிரதம நூலகரால் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி, வாசகர்களுக்கான பொது அறிவுப் போட்டி, சிறுவர்களுக்கான போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு:

**கட்டுரைப் போட்டி (கீழ்ப்பிரிவு)**

சூ.ஒலைக்ஷன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), இ.தனுஷியன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), ர.அபிராமி (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

**(மேல்பிரிவு)**

ம.அபிஷாந் (மானிப்பாய் இந்துக் கல்லூரி) பா.மாதங்கி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), சு.சுவண்யா (மானி.மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை).

**பொதுஅறிவுப் போட்டி (வாசகர்களுக்கானது)**

த.சுதர்ஷன் (சங்கானை), ப.குருபரன் (மானிப்பாய்), ந.யாழினி (மானிப்பாய்).

**சிறுவர்களுக்கான போட்டி.**

**உருவம் இணைத்தல் (கீழ்ப்பிரிவு)**

எஸ்.வர்ஷாயினி (வலி. தென் மேற்கு பிரதேச சபை முன்பள்ளி), எஸ்.மயூரி (வலி. தென் மேற்கு பிரதேச சபை முன்பள்ளி), எஸ்.லக்ஷன் (வலி. தென் மேற்கு பிரதேச சபை முன்பள்ளி).

**சொற்களை இணைத்தல் (மேல் பிரிவு)**

ஆர்.சதுர்சிகன் (வலி. தென் மேற்கு பிரதேச சபை முன்பள்ளி), ஜே.லதீப் (வலி. தென் மேற்கு பிரதேச சபை முன்பள்ளி), கே.சயூரன் (வலி. தென் மேற்கு பிரதேச சபை முன்பள்ளி). (48)

# வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களை முன்னின்று செயற்படுத்துபவர் அமைச்சர் டக்ளஸ்

## பிரதேச அபிவிருத்தி வங்கி முகாமையாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறுபட்ட செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றார் என பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்ப்பாண முகாமையாளர் சுரேஸ் தெரிவித்துள்ளார். மானிப்பாய் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அபிராமி தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிற்துறைகளின் மேம்பாட்டுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாரிய பங்களிப்புகளை வழங்கி வருகின்றார்.

அதுமட்டுமன்றி இலகுகடன் வசதிகளையும் பெற்றுக் கொடுத்து தொழிற்துறைகளை முன்னேற்றுவதிலும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்.

அமைச்சரின் ஆலோசனைக்கு அமைவாக பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான உதவித் திட்டங்களுக்கு ஊடாகவே பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியுமென்பதுடன் பொருளாதாரத்தையும் விருத்தி செய்ய முடியும்.

பெண்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் காணும் போதுதான் அச்சமூகம் பொருளாதாரத்திலும் மேம்பாடுகளை காணமுடியுமென்றும் தெரிவித்தார். நிகழ்வில் அமைச்சர் உரையாற்றும் போது, பெற்றுக் கொள்ளப்பட்ட பயிற்சிகள் உங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சரியாகப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

இந்நிலையில், அபிராமி தையல் பயிற்சி நிலையத்தின் பொறுப்பாளரும், பயிற்றுவிப்பாளருமான திருமதி ஜெய கௌரி கிருபாகரனின் முயற்சிகளுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் அதேவேளை, அவரது முயற்சி மேலும் தொடர வேண்டும்.

அத்துடன், பயிற்சிகளை நிறைவு செய்தவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான சந்தைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் எனது ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் எப்போதும் இருக்கும்.

அதுமட்டுமன்றி தேவையான தொழிற்துறை உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் அவற்றை பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இதன்போது சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் திருமதி செல்வகுமாரி நேசரட்னம், முன்னாள் மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, தேசமானி செல்வராஜா, ஈ.பி.டி.பியின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் ஜீவா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு பணியாளர்களுக்கு சம்பள உயர்வு

## சமாசத்தின் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ் இயங்கும் யாழ். மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஜனவரி முதல் 30 வீத சம்பள உயர்வு வழங்குவது குறித்த தீர்மானம் பணியாளர்களின் ஒருமித்த கருத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சமாசத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தகவல் தருகையில், யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் நா. கணேசன் தலைமையில் சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது. அங்கத்துவ சங்கங்களின் தலைவர்கள், உப தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோர் முன்னிலையில் குறித்த விடயம் ஆராயப்பட்டு பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது தொடர்பான தனிப்பட்ட கருத்துக்களும் பெறப்பட்டு கீழ்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கூட்டுறவு வேலையாளர ஆணைக்குழுவினால் (2006ஆம் ஆண்டு) நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சம்பளத் திட்டத்தின் படி பணியாளர்கள் தற்போது சம்பளம் பெற்று வருகின்றனர்.

இவ் அடிப்படைச் சம்பளத்தின் முப்பது வீத (30%) சம்பள உயரவை 01-01-2015இல் இருந்து வழங்க வேண்டும் என்று தலைவர்கள், உப தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரால் முன்வைத்த கருத்தை சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் தலைவர் சி. நந்தகுமார் முன்மொழிய கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் இ. உதயசூரியன் வழிமொழிய சபையால் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என தெரிவித்துள்ளார்.

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் முழு நேர மற்றும் பகுதி நேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடாத்தி வருகின்றது.

இக்கற்கை நெறிகள் கைதடி, காரைநகர், சுன்னாகம், வல்வெட்டித்துறை ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வருகின்றன.

இதில் மரவேலை தொழில் நுட்பவியலாளர் (தளபாடம்), கட்டட நிர்மாண உதவியாளர் (மேசனறி), காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), டீசல் இயந்திர திருத்துநர், இரு சக்கர மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர், குளிரூட்டி இயந்திர திருத்துநர், விவசாய இயந்திர திருத்துநர் இவ்வனைத்து கற்கை நெறிகளும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 1ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல: 12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், தொ.பே.இல. 0212227949 அல்லது தொழிற் பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டாக்காலி நாய்களால் சிரமப்படும் வர்த்தகர்கள்

(வரணி)

வரணிப் பொதுச் சந்தைப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துள்ளதால் வர்த்தகர்களும், சந்தை வியாபாரிகளும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது. கட்டாக்காலிகளாக திரியும் நாய்கள் இரவு வேளைகளில் சந்தைக் கட்டடப் பகுதிகளிலும் வர்த்தக நிலையத்திற்கு முன்பாகவும் படுத்துறங்குவதுடன் இடத்தை அசிங்கப்படுத்திவிட்டு செல்வதால் அதிகாலையில் வியாபாரத்திற்காக வரும் வர்த்தகர்கள் பலவேறு நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகவும் இவற்றை துப்பரவு செயத பின்னரே கடையைத் திறக்க வேண்டிய நிலை உள்ளதாகவும் வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, வியாபாரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (150)

## டெங்கு ஒழிப்பு

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் இளவாலை கிராமத்தில் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டு டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கிராம மக்கள் அனைவருக்கும் ஒலிபெருக்கி மூலமாக நுளம்பு பெருக தக்க வகையிலுள்ள கழிவுப் பொருட்களை சேகரித்து பொதி செய்து வைத்துக்கொள்ளுமாறும முன்னதாகவே அறிவுறுத்தப்பட்டு வலி. வடக்கு சபையின் வாகனத்தின் உதவியுடன் வாலிபர் சங்க உறுப்பினர் வீடுகள் தோறும் சென்று அப்பொதிகளை சேகரித்தனர். (48)

## மேற்குலகின் சூழ்ச்சியே மைத்திரியின் களமிறக்கம்

### அரசு குற்றச்சாட்டு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மேற்குலக சக்திகள் சதி செய்வதாக அரசாங்கம் மீண்டும் குற்றம சாட்டியுள்ளது.

கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் மகிந்த சமரசிங்க,

இலங்கையில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்ட வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்கு நாடுகள் இரகசியமாக எதிரணியின் வேட்பாளராகப் போட்டியிடும் மைத்திரிபால சிறிசேனவுக்குப் பின்புலத்தில் இருந்து செயற்படுகின்றன.


அவர் வேட்பாளராகக் களமிறக்கப்பட்டது மேற்கு நாடுகளின் சூழ்ச்சியாகும். என்றும் தெரிவித்துள்ளார்.

# எதிரணி வேட்பாளர் வெற்றி பெற்றால் சந்திரிக்கா-ரணில் ஆட்சியே இடம்பெறும்

### கூறுகிறார் குணதாச அமரசேகர

(கொழும்பு)

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றியீட்டினால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவினதும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினதும் ஆட்சியே நீடிக்கும் என தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.



தவறுதலாக மைத்திரிபால ஆட்சிக்கு வந்தால், ரணிலினதும் சந்திரிக்காவினதும் ஆட்சியையே காண முடியும்.

மைத்திரிபால ரணிலை சேர் என்றும் சந்திரிக்காவை மேடம் என்றும் அழைத்து ஆட்சி நடத்துவார். மருந்து சட்டத்தை அதிகாரிகள் திருடுவதனை மைத்திரிபால வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

நாட்டை ஆட்சி செய்ய போட்டி போடும் இந்த சட்ட வரைவினை சிங்கள மொழி யில் மொழி பெயர்ப்புச் செய்யக் கூட முடியவில்லை.

அரச சார்பற்ற நிறுவனங்களின் நிபந்தனைகளுக்கு அடிப்படையில் சந்திரிக்காவும், ரணிலுமே இந்த நாட்டை ஆட்சி செய்வார்கள். ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சம்பிக்க ரணவக்க ஆடை அணிந்து கொண்டா பேசுகின்றார்.

ஹெல உறுமயவின் கொள்கைகள் முற்றிலும் மாற்றமடைந்துள்ளன என குணதாச அமரசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

# புதிய ஜனாதிபதி நியமனத்தால் ஸ்திரத்தன்மை பாதிக்காது


### முன்னாள் நீதியரசர் சரத்.என்.சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதனால் நாட்டின் ஸ்திரத்தன்மக்கு பாதிப்பு ஏற்படாது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்படுவதனால் நாடு தோல்வியடையக் கூடிய சாத்தியங்கள் எதுவும் கிடையாது.

அரசியல் அமைப்பில் அதற்கான சாத்தியங்கள் எதுவும் கிடையாது. பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ் இலங்கைக்கு



விஜயம் செய்யும் காலப்பகுதியில் புதிய ஜனாதிபதி நியமிக்கப்படுவதில் பிரச்சினைகள் கிடையாது.

நாட்டின் அரசியல் அமைப்பின் 31ஆவது சரத்தின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலில் ஒருவர் வெற்றியீட்டினால் அந்த நிமிடம் முதல் அவரே நாட்டின் ஜனாதிபதியாவார்.

அரசாங்கம், அமைச்சரவை, முப்படைகள், நிறைவேற்று அதிகாரம் போன்ற அனைத்திற்கும் தலைமை வகிப்பவராக திகழ்வார். பதவி வகித்து வரும் ஜனாதிபதிக்கு ஏதேனும் பதவிக் காலம் எஞ்சியிருந்தால் அது இரத்தாகும்.

பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் புதிய ஜனாதிபதியின் உத்தரவிற்கு அமையவே செயற்படும்.

எனவே பாப்பரசரின் இலங்கை விஜயமோ அல்லது வேறும் விசேட நிகழ்வுகளோ புதிய ஜனாதிபதி தெரிவினால் பாதிக்கப்படாது என சரத் என் சில்வா விளக்கமளித்துள்ளார்.

# வெளிநாட்டு கண்காணிப்பாளர் வீண் என்கிறது ஜே.வி.பி.


(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க வெளிநாட்டவர்களை அழைப்பது பயனற்றது என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட ஜே. வி. பி. தலைவர அநுரகுமார திஸாநாயக்க, வெளிநாட்டு கண்காணிப்பாளர் இலங்கையில் வந்து சில நாட்கள் தங்கியிருந்து விட்டு போகும் போது அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து விட்டு சென்று விடுவர் அவர்களுக்கு இலங்கையை பற்றிய பூகோள மற்றும் அரசியல் அறிவு இருப்பதை எதிர்பார்க்க முடியாது.

அத்துடன் ஒரு சிறியகுழு வந்து முழுநாட்டிலும் தேர்தல் கண்காணிப்பை மேற்கொள்வது என்பது சாத்தியமற்ற செயல் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாப்பரசரின் புகைப்படத்தை அரசியலுக்கு பயன்படுத்தாதீர்



கத்தோலிக்க தலைவர் பாப்பரசர் பிரான்சிஸ் இன் புகைப் படங்களை ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்த வேண்டாம் என அரசியல் கட்சித் தலைவர்களுக்கு .கர்தினால் மல்கம் ரஞ்சித் பெரேரா ஆண்டகை உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் பல பாகங்களிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பாப்பரசர் பிரான்சிஸ் ஐ சந்தித்தபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களை கொண்ட சுவரொட்டிகள் மற்றும் பாரிய பனர்கள் கத்தோலிக்க மக்கள் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

இந்நிலையில் தேர்தல் சாதாரணமான முறையில், நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெற வேண்டும்.

இக்காலகட்டத்தில் போப் ஆண்டகை இலங்கை வருகின்றார். அவரின் வருகையை ஒருபோதும் அரசியலுக்காக பயனபடுத்த வேண்டாம். என மல்கம் ரஞ்சித் அரச தலைவர்களிடம் வேண்டியுள்ளார்.

## நீக்கம்

லங்கா சம சமாஜக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் பலர் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இக்கட்சியின் அரசியல் சபைக் கூட்டத்தில் வைத்து இந்தத் தீர்மானம் முன்னெடுக்கப பட்டுள்ளது. பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கியமையே இவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவதற்கான காரணம் என பி.பி.சி. சிங்கள சேவை அறிவித்துள்ளது

# இடமாற்றம்

(கொழும்பு)

முன்னாள் கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றிய பொலிஸ் பரிசோதகர் உட்பட 20 பேரை நேற்று முன்தினம் தூர இடங்களுக்கு மாற்றப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அனுராதபுர பிரதான பொலிஸ் நிலையத்திலிருந்து தூர இடத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு இவர்கள் மாற்றப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த மாற்றம் இடம்பெற் றுள்ளது.

தேர்தல் ஒன்று அறிவிக்கப் பட்டுள்ள நிலையில் இவ்வாறு இடமாற்றம் நடைபெறுவது தேர்தல் சட்டத்தை மீறும் செயல் என சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது.

# இந்திய புலனாய்வுப் பிரிவு இலங்கை வருவதில் இழுபறி

(கொழும்பு)

தென்னிந்தியாவில் உள்ள அமெரிக்க, இஸ்ரேலியத் தூதரகங்கள் மீது தாக்குதல் நடாத்துவதற்கு, திட்டமிட்டது குறித்து இலங்கையில் விசாரணை நடாத்த இந்தியாவின் தேசிய புலனாய்வுப் பிரிவு அனுமதி கோரியுள்ளது.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றிய அதிகாரியான அமீர் சுபார் சித்திக் மூலம், பாகிஸ்தான் உளவு பிரிவு இந்த சதித் திட்டத்தை தீட்டிய தாக இந்திய புலனாய்வுப் பிரிவு கண்டறிந்துள்ளது.

இதுகுறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கு, இலங்கைக்கு செல்வதற்கு இந்தியாவின் தேசிய புலனாய்வுப் பிரிவு இந்திய அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளது.

எனினும் மூன்று மாதங்களாகியும், இந்திய அரசாங்கத்திடம் விடுக்கப்பட்ட இந்தக் கோரிக்கை நிலுவையில் உள்ளது.

இந்தியப் புலனாய்வுப் பிரிவு இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் இன்னமும் இலங்கை அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவில்லை என்று உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்ததாக பிரிஐ செய்தி வெளியிட்டுள்ளது.

# பௌத்த இனவாத கட்சியொன்று மைத்திரிபாலவுடன் இணைந்துள்ளது

### சிறுபான்மையினருக்கு நன்மை இல்லை-விமல்

இந்த நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு எதிராக இயங்கும் பாரியதொரு பௌத்த இனவாதக் கட்சி ஒன்று எதிர்க்கட்சிகளின் போது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்துள்ளது.

அக்கட்சி அந்தரங்க உடன்படிக்கைகளிலும் கைசாத் திட்டுள்ளது. இந்த இனவாத கட்சி மைத்திரிபால,சந்திரிக்கா மற்றும் ரணிலுடன் இருக்கும் வரை முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கும் எவ்வித விமோசனமும் கிடைக்காது என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மருதானையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அமைசசர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த நிகழ்வில் சிரேஸ்ட அமைச்சர் ஏ.எச்.எம் பௌசியும் கலந்து கொண்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்:

குறித்த பௌத்த இனவாதக் கட்சி ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இருக்கும் வரை சிறுபான்மைக்கு எந்தவித வரப் பிரசாதங்களை வழங்க விடாது தடுத்துக் கொண்டிருந்தது.

இந்நிலையில் முஸ்லிம்களாகிய நீங்கள் சற்று சிந்தியுங்கள். ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது மகிந்த ராஜபக்தான். ஆகவே நீங்கும் அவருக்கு வாக்களித்து மகிந்த ராஜபக்சவின் வெற்றியில் பங்குதாரர்களாகி விடுங்கள்.



ரணில் யானைச் சின்னத்தில் வந்திருந்தால் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் ஒரு பாரிய போட்டியாகவும் சவாலாக வும இருந்திருக்கும். ஆனால் அவர் கடந்த முறை சரத் பொன்சேகாவை பலிக்கடாக்கினார். இம் முறை சந்திரிக்கா பண்டாரநாயக்காவைப் பயன்படுத்தி மைத்திரிபால சிறி சேனாவ்வை வேட்பாளராக நிறுத்தியுள்ளார்.

மைத்திரிபால சிரிசேன ஒரு நிலையான கொள்கையில்லாதவர், தலைமைத்துவத்துக்கு பொருத்தமற்றவர், எல்லாவற்றுக்கும் தலையாட்டுபவர். என அவர் மேலும் தெரிவித்தார்.





நாவற்குழி ஐயனார் கோவிலடி கிராமத்தில் அண்மையில் பெய்த கன மழையால் கிராமம் பூராக மழை நீர் தேங்கி நிற்பதனையும் இதனால் அக் கிராம மக்கள் நெருக்கடி நிலைகளை எதிர்நோக்கியதையிட்டு கைதடியில் தற்போது இடம்பெற்றுவரும் சாவகச்சேரி பொலிஸ் நடமாடும் சேவையினர் கால்வாய் வெட்டி வெள்ள நீரை அகற்றியபோது... (இ,51)

## டெங்கு விழிப்புணர்வு நாடகம்



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நாடகம் நேற்றுமுன்தினம் பொது இடங்களிலும் பாடசாலைகளிலும் நடாத்தப்பட்டன.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் இந்தவாரம் முழுவதும் டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனபடுத்தபட்டு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அந்த வரிசையில் டெங்கு தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு நாடகங்கள் கிராமத்தின் பொது இடங்களில் நடாத்தப்பட்டன.

இந்த தெரு விழிப்புணர்வு நாடகத்திற்க்கான கதை, எழுத்துரு இயக்கம் என்பவற்றை தேவராசா லக்ஸ்மன் (இளவாலை திருமறைக்கலாமன்றம்) இசையமைப்பை எஸ்.கொலின், ஒப்பனையை ரோபர்ட் வழங்கியுள்ளனர. அத்துடன் இந்த நாடக கலைஞர்களாக இளவாலை புனித வளனார் விடுதி மாணவர்கள் நடித்துள்ளனர். நடிகர்களாக செ.வினோதன், ஞா.அன்ரனிராஜ், சி.சாஜகான். ஜே.நியாந்த்ன். யூ.விஜயராஜ், வி.நிரோஜன், யெ.கஸ்மின், ஜோ.ஜோனிருஜன் ஆகியோர் நடிக் கின்றனர். மற்றும் இந்த நாடகத்திற்க்கான பாடலை செல்வன். பி.லிவின்சன் வழங்கியுள்ளார்.

# ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு தொழிற்சாலைகள் நிறுவப்படவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவிப்பு


(யாழ்ப்பாணம்)

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு வடபகுதியில் தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்கிற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய கலந்துரையாடல் குறித்து தெளிவானதும் பின்பற்ற வேண்டியதுமான கருத்துக்களையும், இங்குள்ள சூழ்நிலைகள் குறித்தும் மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர் குறிஞ்சிதரன் தெளிவுபடுத்தியுள்ளார்.



காத்திரமான சூழலுக்கு அமைதியான சூழ்நிலை அவசியமாகின்றது. ஒருகால கட்டத்தில் தவறான வழிநடாத்தல்களினால் தேவையற்ற அழிவுயுத்தத்திற்கு எமது மக்கள் முகங்கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டது.

இன்று ஒரு அமைதியான சூழல் பெற்றுத்தரப்பட்டுள்ள நிலையில் இன்றைய சூழலுக்காக எமது மக்கள் அளவிடமுடியாத அர்ப்பணிப்பைச் செய்துள்ளனர்.

அந்தவகையில் இக்கருத்தரங்கு மூலம் இங்குள்ள தொழிற துறைசார்ந்த அனைவரும் நிச்சயம் நல்ல பலன்களை பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே, அனைவரும் ஒத்துழைப்பையும், ஒத்தாசையையும் வழங்குவதுடன் இக்கருத்தரங்கின் வழிகாட்டல்களுக்கு ஊடாக சமுதாயத்தின் பொருளாதாரத்தையும் அபிவிருத்தியையும் மேம்படுத்த முடியுமென நான் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

இதன்போது கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாளர் சிவகெங்காதரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், பொறியியல்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் விஜயகுமார் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## வருடாந்த கலைநிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்த கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு திருமதி வி.சுதர்ஷினி தலைமையில் கைதடி மேற்கு சரஸ்வதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (51)

# மகிந்த சிந்தனை செயற்றிட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு காலணிகள் வழங்கல்

பாடசாலை மாணவர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனை செயற்றிட்டத்தின் கீழ் இலவசமாக காலணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வருட முற்பகுதியில் பாடசாலைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மாணவர்களின் விபரங்களினை அடிப்படையாகக கொண்டு காலணி வழங்கும் இச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேன்மையடையச் செய்யும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள இச்செயற்பாட்டின் மூலம் கஷ்ரப்பிரதேச, அதிகஸ்ரப் பிரதேசப் பாடசாலை மாணவர்களுக்கும் கிராமப்புறப் பாடசாலை மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

டீ.எஸ்,ஐ. நிறுவனத்தினால் தயாரித்து வழங்கப்படும் இக்காலணிகள் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு கையளிக்கப்பட்டு வலயக்கல்வி பணிப்பாளர்களின் மேற்பார்வையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு பின்னர் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. (03)

## முரசின் இன்றைய பலன்

(05.12.2014 வெள்ளிக்கிழமை)

ஐய வருஷம் கார்த்திகை மாதம் 19 ஆம் திகதி.
சித்தம் / சதுர்த்தசி.
கார்த்திகை நட்சத்திரம் முன்னிரவு 11.52 வரை. பின் ரோகினி.
இராகு காலம 10.46 - 12.16 வரை. சுபநேரம 06.16 - 07.46 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
அவசர புத்தியையும் கோபத்தையும் கைவிடுதல் நன்று, வெளியூர் செல்ல முற்படுதல்.

**ரிஷபம்**
வந்த இலாபம் சுப காரியத்திற்கு பயன்படுத்தல், உறவினைப்பேண முன்வருதல்.

**மிதுனம்**
சமூக சேவையில் ஈடுபாடு காட்டல், துன்பங்கள் நீங்க வழி பாட்டினை மேற்கொள்ளுங்கள்.

**கடகம்**
எச்சரிக்கையாக இருப்பது நன்மை தரும், தாயாரின் தேக நலம் பாதிப்படைதல், கவலை அதிகரிக்கும்.

**சிம்மம்**
ஆடம்பரப் பொருட் கொள்வனவு தவிர்த்தல் நன்று, உத்தியோகம் தொடர்பாக திடீர் மாற்றம் ஏற்படலாம்.

**மீனம்**
வேதனைகளை எண்ணி சாந்தமடைதல், இன்றைய தினம் விக்கினங்கள் விலகும்.

**கன்னி**
அநாமதேய தொலைபேசி அழைப்பால் அச்ச உணர்வு ஏற்படல், காலாவதியான உணவுகளில் எச்சரிக்கை அவசியம்.

**கும்பம்**
காரியத்தில் கண்ணாக இருக்கவும், தேங்கிய நிலுவைகளில் ஒரு பகுதி கைக்கெட்டும்.

**மகரம்**
மாமியார் உறவில் கசப்பு ஏற்படும், கடன் பெற நண்பரை நாடுதல்.

**தனுசு**
சொத்துப் பிரச்சினை இழுபட்டுச் செல்லும், சகோதரர்களின் உதவியும் ஒத்தாசையும் கிட்டும்.

**விருச்சிகம்**
கள்ள பணநோட்டு கைக்கு வரும் அபாயம், தடைப்பட்ட காரியம் சித்தியடைதல்.

**துலாம்**
ஆரோக்கியத்திலும் அதிக அக்கறை காட்டுங்கள், யோசித்துச் செயலில் இறங்குங்கள்.

# யாழில் கால்பந்து மரபு மீளவும் துளிர்க்கும் நிலை

## அன்ரனிப்பிள்ளை மகிழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (பிபா) முன்னெடுப்புக் காரணமாக யாழ்ப் பாணத்துக் கால்பந்து மரபு மீண்டும் துளிர்க்கும் நிலையைப் பெற்றுள்ள துடன் எதிர்வரும் காலங்களில் யாழ். வீரர்கள் இலங்கை அணியில் இடம் பிடிக்கக்கூடிய அதிக வாய்ப்புக்களும் திறக்கப்பட்டிருக்கின்றன என யாழ்ப் பாணக் கால்பந்தாட்ட லீக் தலைவர் கிளிபோட் அன்ரனிப்பிள்ளை தெரிவித் துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அரியாலை யில் அமையப்பெற்றுள்ள கால்பந்து பயிற்சி நிலைய அங்குரார்ப்பண நிகழ் விற்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்து கையிலேயே அன்ரனிப்பிள்ளை மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரி விக்கையில், கடந்த ஐந்து ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் கால்பந்து விளையாட் டின் வளர்ச்சிகள் மேன்மையடைந்து வரு கின்றன. குறிப்பாக, யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை, தீவகம் என பிரதேச ரீதியாக கால் பந்து லீக்குகள் அங்குரார்ப்பணம் செய்யப் பட்டுள்ளதுடன் அவற்றிற்கூடாக போட் டித் தொடர்களும் நடாத்தப்பட்டு வரு கின்றன. யுத்தத்திற்கு முந்தைய காலங் களில் வடமாகாணம், குறிப்பாக, யாழ். மாவட்ட வீரர்கள் தேசிய ரீதியில் ஜொலித்து வந்தார்கள். ஆனால் கொடிய யுத்தம் காரணமாக எங்கள் அனைத்து விளையாட்டு வளர்ச்சிகளும் பெரும் பின்னடைவைச் சந்தித்தன.

இந்நிலையில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னான இந்த ஐந்தாண்டுகளில் சகல வழிகளிலும் அபி விருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. இதன் ஒரு அங்கமாக இந்த கால் பந்து பயிற்சி நிலையம் அமையப் பெற்றிருக்கின்றது. இதன் மூலம் சிறந்த வீரர்களை எதிர்காலத்தில் எங்களால் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை உள் ளது. அத்துடன் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் முன்னெடுப்புக்கள், ஒத்துழைப்புக்கள் மூலம் எங்கள் கால்பந்து மரபு மீண்டும் துளிர்க்கும்.



எதிர்காலங்களில் இலங்கை அணியில் யாழ். வீரர்கள் இடம்பிடிப்பது தவிர்க்க முடியாத நிலையை ஏற்படுத்தும்.

சர்வதேச கால்பந்தாட்ட கோல்புரொ ஜெக்ட் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்த வசதியின் மூலம் கால்பந்தாட் டத்தை முன்னெடுப்பது மட்டுமல்லாது அதன் மூலம் பரஸ்பர புரிந்துணர்வை உண்டாக்கி, கல்வி உட்பட அனைத்துத் துறைகளிலும் சிறந்த பிரஜைகளை உருவாக்குவதே எங்கள் நோக்கம் எனத் தெரிவித்தார்.

## விளையாட்டு செய்திகள்

### வீரர்கள் கௌரவம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் நுவ-ரெலியா மாநகர சபை மைதானத்தில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான விளை யாட்டுப் போட்டிகளில் கோப்பாய் ஆசி ரியர் பயிற்சிக் கலாசாலையிலிருந்து பங்குபற்றி சாதனை படைத்த வீரர் களுக்கான கௌரவிப்பு விழா இன்று முற்பகல் 10.00 மணியளவில் மாண வமன்றத் தலைவர் ம. சயந்தறூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தின ராக வைத்திய கலாநிதி செ. அறிவுச் செல்வன் (பொறுப்பு வைத்திய அதி-காரி, விளையாட்டு மருத்துவ அலகு, யாழ். போதனா வைத்தியசாலை) சிறப்பு விருந்தினராக வே.கா. கண பதிப்பிள்ளை (முன்னாள் அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.



சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் இளைஞர் கழகங்களிற்கு விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. இளைஞர் கழகங்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கேற்ப சுதுமலை தெற்கு இளைஞர் கழகம், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி இளைஞர் கழகம், புனிதவளனார் விடுதி இளைஞர் கழகம் ஆகியவற்றிற்கு இவ்விளையாட்டு உபகரணங்கள் அள்பள்ளிப்புச் செய்யப்பட்டன. (48)

# உலக கிண்ண. தொடருக்கான இந்திய உத்தேச அணி அறிவிப்பு

## சேவாக், யுவராஜ், சகீர், ஹர்பஜன் அவுட்




(புதுடில்லி)

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான முப்பது பேர் கொண்ட உத்தேச அணியை இந் திய கிரிக்கெட் சபையின் தேர்வுக் குழு நேற்று வெளியிட்டது.

இதில் கடந்த 2011 ஆம் ஆண்டு உலகக் கோப்பையை கைப்பற் றிய அணியில் இடம் பெற்றிருந்த சேவாக், யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங், சகீர்கான் ஆகியே-ார் இந்த உத்தேச அணியில் இடம் பெறவில்லை.

டோனி, தவான், ரோகித் சர்மா, ரகானே, உத்தப்பா, விராட் ஹோலி, சுரேஷ் ரெய்னா, அம்பதி ராயுடு, கேதர் யாதவ், மனோஜ் திவாரி, மணிஷ் பாண்டே, சகா, சஞ்சு சாம்சன், அஸ்வின், பர்வேஷ் ரசூல், . கரன் சர்மா, அமித் மிஸ்ரா, ரவிந்திர ஜடேஜா, அக்சார் படேல், இசாந்த் சர்மா, புவனேஸ்வர் குமார், மொகமது சமி, உமேஷ் யாதவ், வருண் ஆரோன், தவால் குல்கர்னி, ஸ்டுவர்ட் பின்னி, மோகித் சர்மா, அசோக் டிண்டா, குல்தீப் யாதவ், முரளி விஜய் ஆகியோர் உத்தேச பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

# ஒலியெழுப்பத் தடை



கிரிக்கெட் போட்டி நடைபெறும் போது மைதானத்தினுள் சத்தம் எழுப்பும் ஹோன்கள் மற்றும் கருவிகளை உள்ளே கொண்டு செல்ல தடைசெய்வதற்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாக குழு தீர்மானித்துள்ளது.

விளையாட்டினை பார்வையிட வரும் பார்வையாளர் களுக்கு பாதுகாப்பு கருதியும் அவர்களது நன்மை கருதி யுமே இவ்வாறான முடிவு எட்டப்பட்டுள்ளது. இந்தத் தடை அம்பாந்தோட்டையில் இலங்கை மற்றும் இங்கிலாந்து அணியினருக்கு இடையில் நேற்று முன்தினம் மூன்றாவது ஒரு நாள் போட்டியின் போது அமுல்படுத்தப்பட்டது.

அது தவிர சத்தம் எழுப்பும் கருவிகளுக்கே தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் மற்றைய சுலோகங்கள், பேப்பர் வாழ்த்துக்கள் எப்போதும் போல அனுமதிக்கப்படுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரட்டைச் சாதனை




இங்கிலாந்து அணிக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை வீரர் சங்கக்காரா இரண்டு சாதனைகளை படைத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 242 ஓட்டங்கள் எடுத்தது. இதில் சங்கக்காரா 63 ஓட்டங் கள் எடுத்தார்.

முன்னதாக இவர் 13 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஒருநாள் போட்டி யில் 13 ஆயிரம் ஓட்டங்களை கடந்த 4ஆவது வீரர் என்ற சிறப்பை பெற்றார். 37 வயதான சங்கக்கரா இதுவரை 386 போட்டிகளில் விளையாடி 19 சதத்துடன் 13,050 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இந்த வகையில் முதல் 3 இடங்களில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் (18,426 ஓட்டங்கள்), அவுஸ்ரேலியாவின் ரிக்கி பொண்டிங் (13,704), இலங்கையின் ஜெயசூரியா (13,430) உள்ளனர்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 21 ஓவர்கள் முடிந்திருந்த போது 2 விக்கெட்டுக்கு 136 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இதில் குக்கை (34 ஓட்டங்கள்) விக்கெட் கீப்பர் சங்கக்காரா பிடி யெடுத்து ஆட்டமிழக்கச் செய்தார். இதன் மூலம் ஒருநாள் போட்டியில் அதிகம் பேரை ஆட்டமிழக்க செய்த விக்கெட் கீப்பர் என்ற உலக சாதனை யைப் படைத்தார். இவர் இதுவரை 473 பேரை (386 ஆட்டம்) வெளியேற்றி இருக்கிறார். அவுஸ்ரேலிய விக்கெட் கீப்பர் கில்கிறிஸ்ட் 472 பேரை (287 ஆட்டம்) ஆட்டமிழக்கச் செய்ததே இதற்கு முன்பு விக்கெட் கீப்பரின் சாதனையாக இருந்தது.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி மழை பெய்ததால் 35 ஓவரில் 8 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 242 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி மீளவும் மழை குறுக்கிட்டதால் 236 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டக்வேர்த் லூவிஸ் முறையில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

# அரச சலுகைகளை பெறும் அலுவலர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும்


## சந்திரகுமார் எம்.பி. அறிவுறுத்தல்

(கிளிநொச்சி)

ஜனாதிபதியின் தூரநோக்கு சிந்தனைக்கமைவான வேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன என ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள பழைய மாவட்ட செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்கு சிறப்பாக சேவையாற்ற வேண்டும் என்பதற்காக வரவு செலவுத்திட்டத்தின் கீழ் சம்பள உயர்வு உட்பட பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற இந்தப் பிரதேசத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மக்களுக்கு சிறப்பாக சேவையாற்றவேண்டியது மிக அவசியமானது என்ற வெளிப்பாடு இதனூடாக உணர்த்தப்பட்டிருக்கின்றது.

இதேவேளை மக்களுக்கான சேவை நேரடியாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற கொள்கைக்கமைவாகவும் அரச திணைக்களங்களின் சேவையைப் பெறுவதற்காக மக்கள் திணைக்களங்களை நாடி வரும் நிலையை மாற்றி மக்களைத்தேடி அபிவிருத்தியும் மக்கள் நலத்திட்டங்களையும் கொண்டு செல்ல வேண்டும் என்ற உயரிய சிந்தனைக்கமைவாகவே இச்செயற்பாட்டுக்கு மேலும் முன்னுரிமை வழங்கப்பட்டது.

எனவே, தேவைகளுடன் வாழும் மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்கு வதற்கு ஒவ்வொரு அரச உத்தி யோகத்தர்களும் இந்த சந்தர்ப்பத்தில் திடசங்கற்பம் பூண வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீனிவாசனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன் மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் மோகனபவன் மற்றும் பிரதித்திட்டப் பணிப்பாளர், வடக்கு மாகாண சபை. உறுப்பினர் தவநாதன் பச்சிலைப்பள்ளி, கரைச்சி, கண்டாவளை பூநகரி பிரதேச செயலர்கள் அரச திணைக்களங்களின் அதிகாரிகள். உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# மாற்றுவலுவுடையோர் தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது

(கிளிநொச்சி)

சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினம் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாற்றுவலுவுள்ளோர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பல்வேறு அரச அரசார்பற்ற அமைப்புக்களின் அனுசரணையுடன் நடைபெற்றது.

இதில் ஏராளமான மாற்றுவலுவுள்ளோர் வன்னிப் பகுதியில் இருந்து கலந்துகொண்டதுடன் அவர்கள் தமது கலை நிகழ்வுகளின் கருத்துக்களையும் அரங்கத்தில் வெளிப்படுத்தினர்.

கிளிநொச்சி மாற்றுவலுவுள்ளோர் சம்மேளனத் தலைவர் சிவமாறன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வரவேற்புரையினை சம்மேளனத்தின் செயலாளர் விஜயலட்சுமி வழங்கினார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீனிவாசன் மற்றும் விருந்தினர்களாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் நவை.குகராசா, காவேரி கலா மன்ற இயக்குனர் யோசுவா அடிகளார் மற்றும் கிறிஸ்தவ மதகுருமார்கள், வரோட் நிறுவன இயக்குனர் மற்றும் அதன் இணைப்பாளர்கள், ஹன்டி கப் சர்வதேசம் நிறுவன வடக்கு கிழக்கு பிராந்திய பணிப்பாளர், பிரதிநிதிகள், எப்.ஆர்.சி இணைப்பாளர் பிறேம், கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் சார்பில் திருமதி. மதியழகன், கிளிநொச்சி மகா வித்தியாலய ஆசிரியர், சக்தி தொலைக்காட்சியின் மகாலட்சாதிபதி நிகழ்ச்சியின் மூலம் மாற்றுவலுவுள்ளோர்களுக்காக நிதியை அர்ப்பணம் செய்த ஆசிரியர் அரவிந்தன், கிளிநொச்சி மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத் தர் தபேந்திரன் கிளிநொச்சி தபாலதிபர் உட்பட பல்வேறு முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (90)

# கண்ணாமரங்களை பயன்படுத்தி மீன்பிடிக்கும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் நடவடிக்கைக்கென பெருமளவு கண்ணாமரங்கள் கடந்த சில நாட்களாக மண்டைதீவு கடல் நீரேரிப் பகுதியில் கடற்றொழிலாளர்களினால் வெட்டப்பட்டு எடுத்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு வெட்டப்படும் கண்ணாமரங்களை படகு மூலமாக எடுத்துச் சென்று கடற்பகுதியில் குவியல் குவியலாக கொட்டிவிட்டு பின்பு அதனை உண்ண வருகின்ற கணவாய், மீன் போன்ற கடலுணவுகளை கடற் றொழிலாளர்கள் பிடித்து வருகின்றனர்.

இவ்வாறான தொழில் நடவடிக்கையின்போது கடலில் கைவிடப்படும் இவற்றால் சிறு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அது அவர்களது வலைகளில் வந்து சிக்கிக்கொள்வதால் அவர்களின் தொழில் பாதிக்கப்பட்டு வருகின்றது.

எனினும், இத்தகைய கடற்றொழில் நடவடிக்கையையும் கடற்றொழில் திணைக்களம் தடை செய்துள்ளது. இருந்தும் மண்டைதீவு கடல் நீரேரியில் பெருமளவு கண்ணா மரங்கள் அண்மை நாட்களாக வெட்டப்பட்டு எடுத்துச் செல்லப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால், இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் கடல் அரிப்பையும் பாதிப்பையும் தடுக்க முடியாமற் போய்விடும் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளதுடன் சம்மந்தப்பட்ட தரப்பினர் இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (பா)



திருமறைக் கலாமன்ற கலா முற்ற ஓவியக் கூடத்தின் முதலாவது நிறைவையொட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் மூத்த ஓவியர் மு. கனகசபை கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை நீ. மரியசேவியர் அடிகளாரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதைக் காணலாம். (27)

# சனிப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?



## கடகம்

**(புனர் பூசம் 4ஆம் பாதம் பூசம், ஆயிலியம்.**

**மனிதநேயம் மிக்க கடகராசிக்காரர்களே!**

இதுவரை உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்ந்து ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமையையும், தாயாருக்கு ஆரோக்கிய குறைவையும், பணப்பற்றாக்குறையையும் தந்து உங்களை நாலாவிதத்திலும் அவஸ்தைப்படுத்திய சனிபகவான் இப்போது 16.12.2014 முதல் 17.12.2017 வரை உள்ள காலகட்டங்களில் 5ஆம் வீட்டில் அமர்வதால் நல்லதே நடக்கும்.

மனதில் தொக்கி நிற்கும் தாழ்வான எண்ணங்களை தூக்கி எறிவீர்கள். எப்படியாவது ஒரு சொத்து வாங்கிவிட வேண்டுமென்று முயற்சி செய்வீர்கள், அந்த முயற்சியும் நல்ல விதத்தில் முடியும். பழுதாகிக் கிடந்த வாகனத்தை மாற்றுவீர்கள். சனிபகவான் பூர்வ புண்ணிய ஸ்தானமான 5ஆம் வீட்டில் அமர்வதால் குழந்தை பாக்கியம் கிடைக்கும். என்றாலும் பிள்ளைகள் கொஞ்சம் முரண்டு பிடிப்பார்கள்.

மகளின் திருமணத்திற்காக வெளியில் கடன் வாங்க வேண்டி வரும். உயர்கல்வி, உத்தியோகத்தின் பொருட்டு மகனை விட்டு பிரிய வேண்டிய சூழ்நிலை உருவாகும். கர்ப்பிணிப் பெண்கள் நீண்ட தூரப் பயணங்களை தவிர்க்கப் பாருங்கள். பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினையில் மூக்கை நுழைக்காதீர்கள். உறவினர்கள் விடயத்தில் நியாயம் பேசப் போய் பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

**சனிபகவான் நட்சத்திர சஞ்சாரப் பலன்கள்:**

16.12.2014 முதல் 24.01.2015 வரை மற்றும் 30.04.2015 முதல் 13.6.2015 வரை மற்றும் 06.9.2015 முதல் 17.10.2015 வரை உங்கள் சஷடம-பாக்கியாதிபதி குருவின் சாரத்தில் விசாக நட்சத்திரம் 4ஆம் பாதம் 5ஆம் வீட்டில் சனி செல்வதால் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் ஏற்படலாம். திடீர் உதவிகள் கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். புது வீடு கட்டி குடிபுகுவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு.

14.6.2015 முதல் 5.9.2015 வரை உங்கள் ராசிக்கு அர்த்தாட்டமச் சனியாக 4ஆம் வீடான துலாம் ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் சனி செல்வதால் இக்காலகட்டத்தில் தாயாருக்கு எலும்புத் தேய்மானம், கணுக்கால் வலி, வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள், தாய்வழி சொத்தைப் பெறுவதில் தடைகள், உங்களுக்கும் வீண் பழி, வேலைச்சுமை வந்து போகும்.

30.04.2015 முதல் 01.08.2015 வரை குருபகவானின் விசாக நட்சத்திரத்திலேயே சனி வக்கரித்து செல்வதால் சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் உருவாகும். சிலர் புதுத் தொழில் தொடங்குவீர்கள். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். அடகிலிருந்த நகை மற்றும் வீட்டு பத்திரத்தை மீட்க வழி வகை பிறக்கும்.

உங்கள் சப்தம-அஷ்டமாதிபதியான சனிபகவான் தன் சுய நட்சத்திரமான அனுஷ நட்சத்திரத்தில் 25.01.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 18.10.2015 முதல் 15.11.2016 வரை செல்வதால் இக்காலகட்டத்தில் செலவினங்கள் அதிகமாகும். மற்றவர்கள் முன்னிலையில் மனைவியை குறைவாகப் பேச வேண்டாம்

15.3.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 19.5.2016 முதல் 12.08.2016 வரை உள்ள காலகட்டங்களில் சனிபகவான் அனுஷ நட்சத்திரத்திலேயே வக்ரமாவதால் கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பிறமொழி பேசுபவர்களால் உதவிகள் உண்டு.

16.11.2016 முதல் 17.12.2017 வரை உங்கள் திருதியாதிபதியும்-விரையாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் சனிபகவான் செல்வதால் தன்னம்பிக்கை குறையும். மனதில் ஒருவிதமான அச்சம் உண்டாகும். கடந்த காலத்தில் ஏற்பட்ட தோல்விகள், இழப்புகள், ஏமாற்றங்களை நினைத்து வருந்துவீர்கள்.

சனிபகவான் இரண்டாம் வீட்டை பார்ப்பதால் மற்றவர்களை எடுத்தெறிந்து பேச வேண்டாம். கண் எரிச்சல், பல் வலி, காது வலி வந்து போகும். அக்கம்-பக்கம் வீட்டாரிடம் அளவாகப் பழகுங்கள். வாக்குறுதிகளை நிறைவேற்றப் போராட வேண்டி வரும்.

வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டங்களை சரி செய்வீர்கள். புது யுக்திகளை கையாண்டு லாபத்தை அதிகப்படுத்துவீர்கள். பங்குதாரர்கள் பணிவார்கள். வெளிநாட்டு நிறுவனங்களின் வாய்ப்புகளும் வரும். இரும்பு, அழகு சாதனங்கள், ரசாயனம், மருந்து வகைகள் மூலம் லாபம் அதிகரிக்கும். பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

கன்னிப் பெண்கள் விரக்தியிலிருந்து விடுபடுவீர்கள். சோர்வு, களைப்பு நீங்கும். நினைத்தபடி திருமணம் முடியும். பாதியிலேயே விட்ட கல்வியை தொடர்வீர்கள். மாணவ-மாணவிகளே! படிப்பில் மட்டுமின்றி விளையாட்டிலும் நீங்கள் பரிசு, பாராட்டுப் பெறுவீர்கள். சக மாணவர்கள் மத்தியில் மதிப்புக் கூடும். சிலர் பெற்றோரை விட்டு பிரியும் நிலை ஏற்படும்.

**பரிகாரம்!**

விநாயகரையும் அம்பிகையையும் வணங்கி வாருங்கள். பற்றுள்ள கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்வது நல்லது. சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்யுங்கள்.

(நாளை சிம்மம்)

# சொன்னார்கள்...

## மகிந்தவின் வெற்றியை விரும்பும் கூட்டமைப்பு

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தடுமாறுவதாக தெரிகிறது. இதன் காரணமாகவே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இதுவரை தேர்தல் தொடர்பில் எந்தவொரு கருத்தையும் தெரிவிக்கவில்லை. மேலும்,



எதிரணியின் எந்தவொரு கூட்டங்களிலும் சம்பந்தன் இதுவரை பங்குகொள்ளவும் இல்லை.

சம்பந்தனின் அமைதியை உற்றுநோக்கினால், கூட்டமைப்பு ஜனாதிபதி ராஜபக்ஷவை மறைமுகமாக ஆதரிப்பதாகவே தெரிகிறது. வெளிப்படையாக இதனைச் சொல்லுவதிலுள்ள சில சிக்கல்களை கருத்தில் கொண்டே, சம்பந்தன் அமைதியாக இருந்து மறைமுகமாக இதனைச் சொல்லுகின்றார். இதேவேளை, அண்மையில் கூட்டமொன்றில் பேசிய சுரேஷ் பிரேமச்சந்திரனும் ராமன் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டால் என்ன என்பதுபோல மறைமுகமாக ஜனாதிபதி ராஜபக்ஷ வெல்லுவதும் பிரச்சினையில்லை என்றவாறு அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றார். மொத்தத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி ராஜபக்ஷ தேர்தலில் வெல்ல வேண்டுமென்றே விரும்புகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மைகளின் வாக்கிற்கும் ஒரு முக்கிய பங்குண்டு. ஆனால் அதனை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி அரசாங்கத்திலிருந்து நன்மைகளை பெறுவது குறித்து தமிழ் அரசியல் தலைமைகள் ஒருபோதும் சிந்திப்பதில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கும் தமிழ் மக்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்றவாறான ஒரு அபிப்பிராயத்தையே பொதுவாக தமிழ் அரசியல்வாதிகள் ஏற்படுத்தி வந்திருக்கின்றனர்.

ஆனால் இப்படியான பகிஸ்கரிப்பு வாதத்தால் தமிழ் மக்கள் எந்தவொரு நன்மையையும் இது வரை அனுபவித்ததில்லை.

**- வாசுதேவன் கட்டுரையில்**

## தமிழகத்தில் போராட பிரச்சினைகளே இல்லையா?

தமிழகத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினையை வைத்தே அரசியல் பேசும் சூழல் நிலவுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

தமிழர் பிரச்சினை என்றால் அது இலங்கைத் தமிழர் பிரச்சினையாக மட்டும்தான் பார்க்கப்படுகிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், தமிழகத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினையை வைத்தே அரசியல் பேசும் சூழல் நிலவுகிறது. இதை மார்க்சிஸ்ட்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

தாராளமயமாக்கல் மூலம் படிப்புக்கேற்ற வேலைவாய்ப்புகள் சுருங்கிக் கொண்டே வருகின்றன. அதனால் இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. பொதுமக்கள் தங்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளைக்கூடப் போராட்டம் மூலமாகத்தான் பெற வேண்டியுள்ளது. நாடு முழுவதும் பெரும்பாலான குடும்பங்களில் பெண்களின் நிலை மிக மோசமாக உள்ளது.

சமீப காலமாக பெண்கள் மீதான வன்முறை அதிகரித்து வருகிறது. இது போன்ற சம்பவங்கள் தமிழகத்திலும் நடைபெறுகிறது. அதனால் பாதிக்கப் பட்டவர்கள் தமிழர்கள் இல்லையா?, அவர்களுக்காகப் போராட தமிழ் தேசிய அமைப்புக்கள் ஏன் முன் வருவதில்லை?.



**- இந்திய மார்க்சிஸ்ட் கட்சி மத்திய குழு உறுப்பினர் உ.வாசுகி**

## புலிகளை உயிர்ப்பிக்கும் ஜனாதிபதி வேட்பாளர்கள்!

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில், அழிந்து போன புலியை அரசும் எதிரணியும் தமது தேர்தல் வெற்றிக்காக இனவாத நோக்கில் உயிர்ப்பிக்கின்றன. மகிந்த அணியும் - எதிரணியும் பரஸ்பரம் மற்ற அணியினரை புலியாகவும், புலிக்கு உதவியதாகவும், உதவுவதாகவும் குற்றம்சாட்டுவதன் மூலம் இனவாதம் முன்வைக்கப்படுகின்றது. இந்த பிரசாரங்கள் மூலம் தமிழ் மொழி பேசுகின்ற மக்களுக்கு எதிரானவர்களாக, சிங்கள மொழி பேசும் மக்கள் முன் மறைமுகமாக முன்வைக்கின்றனர்.

இதேபோல் புலிகளை உருவாக்கிய குறுந்தேசிய இனவாதத்தை வித்திட்டு வளர்த்தெடுத்த பேரினவாதத்தை, ஒழிப்பதற்கு கூட தயாரில்லாத எதிரணி பொது வேட்பாளரின் "ஜனநாயகமானது" போலியானது புரட்டானது.

இனவொடுக்குமுறையும், இனவாதமும் நீடிப்பதை எதிர்த்து போராடத் தயாரற்றவர்கள், முரணற்ற முதலாளித்துவ ஜனநாயக தீர்வை இனப்பிரச்சினைக்கு வைத்துவிடப் போவதில்லை. ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகமல்ல, இனவாதமே வெல்வதற்கான நெம்புகோல் என்பதால், அது புலி பற்றிய பிரசாரமாக வெளிப்படுகின்றது.

சரி யார் இந்த வெளிநாட்டுப் புலிகள் என்று பார்த்தால்...

1. புலிகளை தடை செய்த மேற்குலகுடன், அதை அழிக்கும் அதன் சதியுடன் பயணித்தவர்கள் தான், இந்தப் புலம்பெயர்நாட்டுப் புலிகள்.

2. போராட்டத்தின் பெயரில் திரட்டிய புலிகளின் பணத்தை தமதாக்கி கொண்டு, தமிழ் மக்களை ஏமாற்றி வியாபாரம் செய்கின்ற வியாபாரிகள் தான் இந்த வேட்பாளர்கள் காட்டுகின்ற புலிகள்.




3. புலிகளின் முந்தைய அடையாளங்களை முன்னிறுத்தி, அதைக்காட்டி பணத்தை திரட்டி பிழைக்கின்றவர்களையே இவர்கள் புலிகள் என்கின்றனர்.

4. இலங்கையின் சொந்த முரண்பாட்டை பயன்படுத்தி, மேற்கு ஏகாதிபத்தியங்களுக்கு சேவை செய்யும் கைக் கூலிகளையே இவர்கள் புலிகள் என்கின்றனர்.

இப்படி புலிகளின் பெயரில் ஏய்த்துப் பிழைக்கும் புலம்பெயர் கூட்டத்தையே, அரசும் எதிரணி வேட்பாளரும் புலியாக காட்டுகின்றனர். இதன் மூலம், மக்களை பிளந்து விடுகின்றனர்.

**- இரயாகரன் கட்டுரையில்**

## செல்வி சிற்சபேசனிடம் சுட்டிக்காட்ட வேண்டியது

இலங்கையில் பிறந்தவரும் புதிதாக கனடிய பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவருமான ராதிகா சிற்சபேசன் கீழ் சபையில் உரையாற்றும் போது, இறந்த தமிழ் புலிகளை கௌரவிக்கும் நாளான மாவீரர் நாளை ஒரு முக்கியமான நாள் என்றும் பாராளுமன்றில் இடம் பெறும் இறந்த கனடிய வீரர்களின் நினைவாஞ்சலி நாளுடன் அதை ஒப்பீடு செய்து அவர் குறிப்பிட்டபோது தான் "அதிர்ச்சியும் திகைப்பும்" அடைந்ததாக கனடிய பொதுசன பாதுகாப்பு அமைச்சர் ஸ்ரீவன் பிளானி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வருடமும் நவம்பர் 27இல் கொண்டாடப்படும் தமிழ் மாவீரர் தினம், புலிகளின் பிரிவினைவாத ஆயுதக்குழுவின் முதல் அங்கத்தவர் மோதலில் கொல்லப்பட்ட நாளை நினைவு கூருவதற்காக தமிழ் புலிகளினால் உருவாக்கப்பட்டது.

"மாவீரர் தினம் என்பது தமிழீழ விடுதலைப் புலிகளை மகிமைப் படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நாளாகும்" எனக் குறிப்பிட்ட திரு. பிளானி கனடாவில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் புலிகளும் இடம் பெற்றிருப்பதையும் சுட்டிக் காட்டினார்.

"புதிய ஜனநாயக கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பயங்கரவாதிகளின் கொண்டாட்ட நினைவை வழிமொழிந்தது மட்டுமில்லை, அதை உயிர்த்தியாகம் செய்த எங்கள் கனடிய வீரர்களை கௌரவித்து நினைவாஞ்சலி செய்யும் புனித நிகழ்வுடன் சமப்படுத்தி ஒப்பீடு செய்ததை கேட்டு நான் திகைப்பும் அதிர்ச்சியும் அடைந்தேன்".

ஸ்கார்பரோ - றூஜ் றிவர் பாராளுமன்ற உறுப்பினரான செல்வி சிற்சபேசனிடம் "பயங்கரவாத தொடர்பு உள்ள குழுக்களிடம் வாக்கு சேகரிப்பதை நிறுத்தும்படியும் மற்றும் உடனடியாக அவரால் தெரிவிக்கப்பட்ட இந்த கருத்துக்களுக்காக படை வீரர்கள் மற்றும் அனைத்து கனடியர்களிடத்திலும் மன்னிப்பு கேட்கும்படி" அவர் ராதிகாவை வலியுறுத்தியுள்ளார். தமிழர்களின் சுதந்திரத்துக்காக என மூன்று தசாப்தங்களாக அவர்கள் நடத்திய பிரசாரத்தின் போது, புலிகள் நூற்றுக் கணக்கான தற்கொலை குண்டுத் தாக்குதல்களையும் மற்றும் மிதவாத தமிழ் தலைவர்களையும் அதேபோல முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியையும் படுகொலை செய்துள்ளார்கள். இலங்கைப் படையினரால் 2009இல் அவர்கள் நசுக்கப்பட்டார்கள்.

2006ஆம் ஆண்டு முதல் புலிகள் இயக்கம் கனடிய சட்டப் பிரகாரம் தடை செய்யப்பட்ட பயங்கரவாத குழுவாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. கனடிய தேசிய காவல்துறை, ரொரான்ரோ மற்றும் மொன்ட்ரியலில் உள்ள அந்தக் குழுவின் கிளைகளைக் கலைத்தபோது அவைகள் மோதலுக்கு ஆதரவாக மில்லியன்கள் கணக்கில் நிதி திரட்டியிருந்தன. ரொரான்ரோ பகுதியை சேர்ந்த அரை டசின் வரையான ஆண்கள் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களும் மற்றும் உபகரணங்களும் வழங்கியமைக்காக



தண்டிக்கப்பட்டார்கள்.

இலங்கை - கனடியன் ஊடகவியலாளரான டி.பி.எஸ்.ஜெயராஜ் தனது இணையத்தளத்தில் எழுதியுள்ளது, "மாவீரர் நாள் தமிழர்களின் அஞ்சலிக்குரிய ஒரு தேசிய நாளாக ஒரு போதும் இருந்ததில்லை. மாறாக அது புலிகளினால் புலிகளுக்காக தீவிரமாக நடத்தப்பட்ட கட்சி சார்பான ஒரு நிகழ்வு" என்று.


"நான் நினைக்கிறேன், ஒரு பயங்கரவாத அமைப்பையும் முக்கிய கனடிய மதிப்புகளுக்காக பேரிராடிய் மக்களையும் உங்களால் ஒப்பிட்டு பார்க்கமுடியாது என்று செல்வி சிற்சபேசனிடம் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம்" என்றும் கனடிய பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

**- ஸ்ருவார்ட் பெல் (வாஷிங்டன் போஸ்ட்)**

# விலங்கு விநோதங்கள்!

- பூனைகள் ஒரு நாளைக்கு 16 மணி நேரம் தூங்குகின்றன.
- டொல்பின்கள் அதிகபட்சம் 5 நிமிடங்களுக்குமேல் தூங்குவது இல்லை.
- குதிரை நின்று கொண்டிருந்தால்தான் அதனால் ஒழுங்காக மூச்சுவிட முடியும்.
- நண்டுகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை (பாம்பைப் போல) சட்டையை உரிக்கின்றன. இவ்வாறு தம் ஆயுட்காலத்தில் 18 முறை சட்டையை உரிக்கின்றன.
- ஒரு பட்டுப்புழுவின் கூட்டில் 32 ஆயிரத்து 500 முழம் நூல் இருக்கும்.
- ஒரு சிலந்தி ஒரு மணி நேரத்தில் சுமார் 450 அடி நீளம் கொண்ட வலையைப் பின்னுகிறது.
- நுளம்புகள் ஒரு விநாடியில் தங்கள் இறகுகளை 500 முதல் 600 முறை அடித்துக் கொள்கின்றன. சாதாரண ஈ தனது இறகுகளை 352 முறை அடிக்கும்.
- கோழி முட்டையின் ஓட்டில் சுவாசிப்பதற்கு எட்டாயிரம் நுண் துளைகள் இருக்கின்றன.
- ஒரு ஈயின் உடலின் மீது ஏறத்தாழ 60 இலட்சம் நுண்ணிய கிருமிகள் தொத்திக் கொண்டிருக்கின்றன.
- ஒரு கோழி ஒரு ஆண்டிற்கு சராசரியாக 150 முதல் 300 முட்டைகள் இடும்.
- பெண் சிலந்திப் பூச்சிகள், ஆண் சிலந்தியுடனான உறவுக்குப் பின் அதைக் கொன்று விடுகின்றன.
- தாய் விலாங்கு மீன், முட்டையிட்டதும் உடனே இறந்துவிடும்.
- மனிதனுக்கு இணையான அறிவாற்றல் டொல்பினுக்கு உண்டு.
- குளிர்காலத்தில் குயில் கூவுவது கிடையாது.
- ஸ்காலப் என்ற கடல் சிப்பிக்கு நூறு கண்கள் உள்ளன.
- கொரில்லா எனப்படும் மனிதக் குரங்கு குறட்டை விடுவதில்லை.
- வீட்டுப் பல்லிகள் 2 ஆண்டுகளே உயிர்

# பாரதியாரின் பரிகாசம்!



நான் அப்பொழுது "தேசபக்தன்" பத்திரிகையில் ஓர் உதவி ஆசிரியனாயிருந்தேன். காலை 10.30 அல்லது 11 மணி சுமாருக்கு பாரதியார் எங்கள் காரியாலயத்துக்கு வந்தார். தலைப்பாகை, அதன் கீழ் அகன்ற நெற்றி, அதில் சிவந்த குங்குமப் பொட்டு. குழி விழுந்த இரண்டு கண்கள். அவற்றிலிருந்து கூர்மையான பார்வை, ஒட்டிய தாடைகள். நறுக்கு மீசை. உரத்த சிரிப்பு. ஆனால் அந்தச் சிரிப்பிலே ஆழ்ந்த கருத்து. ஒடுங்கிய மார்பு. வளைந்த முதுகு. அகன்று அகன்று கால்களை எடுத்து வைக்கும் நடை காலில் கிறுக்குச் சடாய். இந்தக் கோலத்துடன்தான் முதன்முதலில் பாரதியாரை நான் பார்த்தேன்.

"ஷேர்ட்" இல்லாமல் கறுப்பு "ஓப்பன் கோட்" மட்டும் அணிந்திருந்தார். அது கசங்கியும் ஒருமாதிரி சாம்பல் பூத்தும் இருந்தது. சட்டை இல்லாத குறையை நிவர்த்தித்துக் கொள்ளும் பொருட்டுத் தமது கழுத்தின் மீது கைக்குட்டையைச் சுற்றி வைத்திருந்தார். அவர் அப்பொழுது கையில் தடியொன்றும் வைத்திருக்கவில்லை. வாயில் நீண்டதொரு சுருட்டுப் பற்றி எரிந்து கொண்டிருந்தது. அதிலிருந்து கிளம்பிக் கொண்டிருந்த காரமான புகை உதவி ஆசிரியர்களாகிய எங்களில் பலருக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

உதவி ஆசிரியர்கள் நாங்கள் ஏழு பேர் இருந்ததாக எனக்கு ஞாபகம். எங்கள் மத்தியில் வந்து நின்ற பாரதியார் ஒரு சிம்மம் பார்ப்பதுபோல் எங்களைப் பார்த்துவிட்டு ஆசிரியரின் அறைக்குள் சென்றார். அப்பொழுது ஆசிரிய பீடத்தில் அமர்ந்திருந்தவர் திரு.வி.கல்யாணசுந்தர முதலியார். இருவரும் சிறிது நேரம் அறையில் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு முதலியார் பாரதியாரைக் கூடத்துக்கு அழைத்து வந்து உதவி ஆசிரியர்கள் ஒவ்வொருவராய் அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த அறிமுக சடங்கு நடைபெறுகிறபோது பாரதியாரின் வாயில் சுருட்டு எரிந்து கொண்டிருந்தது. என்னிடம் பாரதியாரை அழைத்துக்கொண்டு வந்து "இவர்தான் சாமிநாத சர்மா" என்றார் முதலியார். உடனே பாரதியார் வாயிலிருந்த சுருட்டை எடுத்துவிட்டுப் புகையை பறக்கவிட்டு விட்டு, "இவர்தான் போர் வீரரோ?" என்று சொல்லி உரக்கச் சிரித்தார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்தச் சிரிப்பில் பரிகாசம் இருப்பதாக மட்டும் நான் உணர்ந்தேன். பிறகு என் சக உதவி ஆசிரியராய் இருந்த பரலி சு.நெல்லையப்பப்பிள்ளை பாரதியாரின் சிரிப்புக்கு விளக்கம் தந்தபோதுதான் என் மனம் சமாதானமடைந்தது.

அப்பொழுது "தேசபக்தன்" பத்திரிகையின் முதல் பக்கம் பிரசாரத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் தினம் எனது கட்டுரை ஒன்று பிரசுரமாக வேண்டும் என்பது ஆசிரியரின் கட்டளை. அந்தக் கட்டுரைகளின் நோக்கம் சுயராஜ்யப் பிரசாரம்தான். வேறு ஏதுமில்லை.

வாசகர்களுக்கு உற்சாகமூட்டுகிற வகையில் நகைச்சுவையோடு "சுயராஜ்யப் போர்முனையிலிருந்து - ஒரு போர்வீரன் எழுதுவது" என்ற தலைப்புக் கொடுத்து இந்தக் கட்டுரைகளை எழுதி வந்தேன். இந்த மாதிரி எழுதுவது யார் என்று பாரதியார் பரலி நெல்லையப்பரிடமிருந்து விசாரித்துத் தெரிந்து கொண்டிருந்தார்!

பாரதியார் என்னை எந்தவிதமாக உருவகப்படுத்தி வைத்திருந்தாரோ, எனக்குத் தெரியாது. முரட்டுத்தனமாக எழுதுகிறவன். "முண்டாசு கட்டி" வீரனாக இருப்பான் என்று கருதினார்போலும்! அவர் நினைத்ததற்கு நேர்மாறாக என் ஒல்லியான வடிவம் காணப்பட்டதும் அவர், "போர் வீரனுடைய லட்சணம் கொஞ்சம்கூட இல்லாத இவன் "போர் வீரன்" என்று புனை பெயரிட்டுக்கொண்டு எழுதுகிறானே!" என்று கருதியே அப்படி உரக்கச் சிரித்திருக்கிறார்!

பாரதியார் என் உருவத்தைப் பற்றி எந்தவிதமாக வேண்டுமானாலும் பரிகாசம் செய்யட்டும். என் எழுத்துக்களைப் படிக்கிறாரே; அவர் படிப்பதற்குத் தகுதி உடையனவாயிருக்கின்றனவே.. என் மனச்சாந்திக்கு அதுவே காரணமாயிருந்தது.

**('பாரதி தரிசனம்' என்ற கட்டுரையில் வெ.சாமிநாத சர்மா).**

# உடல் பருமன் - அலட்சியம் வேண்டாம்!

**- ஸ்ரீதேவி குமரேசன் -**

ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 26 ஆம் திகதி உலக உடல் பருமன் எதிர்ப்பு தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

சமீபகாலமாக உடல் பருமன்என்பது பெரும் பிரச்சினையாக உருவாகி வருகிறது. இதில் ஆண், பெண், குழந்தைகள் என அனைத்து தரப்பினரும் பாதிக்கப்படுகிறார்கள். ஆரோக்கியமற்ற மற்றும் நேரம் தவறிய உணவு உட்கொள்ளும் முறையினால் உடல்பருமன் நோயாளிகள் அதிகரித்து வருகின்றனர்.

மேலும் இது நீரிழிவு நோய், உயர் அழுத்தம், மாரடைப்பு, மூட்டு அழற்சி, நாளமில்லா சுரப்பி பிரச்சினைகள், குழந்தையின்மை, புற்றுநோய் போன்ற இதர சிக்கல்களுக்கும் வழிவகுக்கக்கூடிய ஒரு முக்கிய உடல் நல பிரச்சினையாக இருக்கிறது.

உடல் பருமனை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். ஒன்று உணவு அதிகமாக உட்கொள்வதால் ஏற்படுவது, மற்றொன்று பரம்பரையாக வருவது.

நம் நாட்டவர்களின் உடலமைப்பை பொறுத்தவரை சதை பருமனைவிட, கொழுப்பு பருமனே தற்போது அதிகரித்து வருகிறது. காரணம், உணவுப் பழக்கவழக்கங்கள் மாறிவிட்டன. என்ன வேண்டுமானாலும் சாப்பிடலாம், எப்பொழுது வேண்டுமானாலும் சாப்பிடலாம் என்கிற நிலை உருவாகிவிட்டது. வெளிநாடுகளை பார்த்து அவர்கள் உணவு பழக்கவழக்கங்கள் மீது மோகம் கொண்டு அந்த உணவுவகைகளை அதிகம் உண்ண பழகிக் கொண்டுள்ளோம்.

பீட்சா, பர்கர் போன்ற ஜங்க் ஃபுட் உணவுகள் நுழைந்துவிட்டன. நாமும் அதன் ருசிக்கு அடிமையாகி எண்ணெய்யில் பொரித்து எடுத்த உணவுவகைகளை குழந்தைகளுக்கும் பழக்கிவிடுகிறோம். இதனால் உடலுக்கு தேவையற்ற கெட்ட கலோரிகள் அதிகம் சேர்ந்துவிடுகின்றன. இதுதான் இன்றைய பெரும்பாலானவர்களின் உடல் பருமனுக்கு காரணம்.

குழந்தைகள் பள்ளிக்கூடம் விட்டு வீடு வந்தால் கம்யூட்டர், டிவி என பொழுதை கழிக்கிறார்களே தவிர உடலை அசைத்து விளையாடுவது கிடையாது.

மேலும் குழந்தைகளைப் பொறுத்தவரை குண்டாக இருந்தால்தான் குழந்தை ஆரோக்கியமாக இருப்பதாகவும் நினைக்கிறார்கள். அதுபோல பெரும்பாலான ஆண்களும், பெண்களும் அலுவலகம் முடிந்து திரும்பியவுடன் தொலைக்காட்சி முன்புதான் அமர்கிறார்கள். இதுவும் உடல் பருமன் ஏற்பட காரணமாக அமைந்துவிடுகிறது.

ஆண்களை விட பெண்கள் அதிகம் உடல் பருமனாக இருப்பதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் வீட்டில் சமைத்த உணவுகள் வீணாகக்கூடாது என்று மீந்து போகும் உணவுகளைச் சாப்பிடுவதனால்தான்.

இன்னொன்று மன அழுத்தம் ஏற்படும் நேரங்களில் அவர்களுக்கு தெரியாமலேயே அதிக உணவுகளை எடுத்துக் கொள்கிறார்கள். பிடித்த பொருள் என்றால் அதிகமாக உட்கொள்கிறார்கள்.


இதனால்தான் அதிகம் பெண்கள் உடல் பருமனாக இருக்கிறார்கள். அதுபோல பேறு காலம், ஓமோன் பிரச்சினைகளுக்காக மாத்திரைகள் சாப்பிடுவது, மாதவிடாய் பிரச்சினைகள் இதுவும் பெண்களின் உடல் எடை கூட்ட காரணமாகிறது.


பொதுவாக பெண்களுக்கு மன அழுத்தம் அதிகமாக இருக்கும். அதைப் புரிந்துகொண்டு சரியான முறையைக் கையாண்டால் இந்த பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

மூன்று மாதம் தொடர்ந்து உடல் பருமன் கூடிக் கொண்டே போனால் உடனடியாக மருத்துவரை அணுகுங்கள். முதலில் உடல் எடை கூடக் காரணம் என்னவென்று நீங்களே ஆராய்ந்து பாருங்கள். அதிகம் சாப்பிடுகிறீர்களா, வாழ்க்கைமுறை மாறியிருக் கிறதா? அல்லது சமையல் எண்ணெய் எதுவும் புதிதாக மாற்றினீர்களா? அதிக மன அழுத்தம் ஏற்பட்டிருக்கிறதா? என்பதை பார்த்து சரி செய்யுங்கள்.

அதுபோல வயதாக வயதாக உடல் எடை கூடுகிறதா? என்பதையும் கவனிக்க வேண்டும். உங்களால் கண்டுபிடிக்க முடிந்தால் அதனை ஆரம்பத்திலேயே குறைத்து விடுங்கள். அப்படி கண்டு பிடிக்க முடியவில்லை என்றால் மருத்துவர்களை அணுகி முறையான சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள்.

உடல் எடை 2 கிலோ கூடினாலும் உடனே அதற்கான காரணங்களை ஆராய்ந்து கண்டுபிடியுங்கள். அதைவிட்டுவிட்டு 2 கிலோதானே என்று அலட்சியப் படுத்தினால் 2 கிலோ பத்து கிலோவாக மாறிவிடும்.





வாழும்.

- கண்ணாடிவிரியன் பாம்பின் வயிற்றிலேயே முட்டை உடைந்து, குட்டியாக வெளிவரும்.
- முயலின் வியர்வைச் சுரப்பிகள் அதன் காலடியில் உள்ளன.
- பறவைகளில் மிக நீண்ட ஆயுளை உடையது ஆந்தை.
- நுரையீரல் மூலம் சுவாசிக்கும் இயல்புடையது திமிங்கலம்.
- கொம்பிலே கண்களையுடைய பிராணி நத்தை.
- வாயைத் திறக்கும்போது மேல் தாடையை மட்டும் அசைக்கக்கூடிய ஒரே விலங்கு முதலை.
- யானையின் தும்பிக்கையில் எலும்புகளே கிடையாது.
- சிம்பன்ஸி குரங்கைத் தவிர வேறு எந்த பிராணிக்கும் சளி பிடிப்பதில்லை.
- பறவைகளுக்கு எப்போதும் வியர்க்கவே வியர்க்காது.
- யானைகள் மணிக்கு 15கி.மீ. வேகத்தில் நடக்கும்.
- குரங்குகளுக்கு இரண்டு மூளைகள் உள்ளன. ஒன்று உடலையும் மற்றொன்று வாலையும் செயல்பட வைக்கிறது.
- முயல் தண்ணீரே குடிப்பதில்லை. ஏனென்றால் அது சாப்பிடும் புல்லில் உள்ள நீரும், இரவில் பெய்யும் பனி நீருமே அதற்குப் போதுமானவையாக இருக்கின்றன.



ஆசிரியர் குழாம்

# பாட இணைபாட விதான செயற்பாடுகள் உட்பட பல்துறைசார் விருத்திகண்டு பல கோணங்களில் மிளிரும் கோண்டாவில் இந்துக் கல்லூரி



(அதிபர்)

**க.தவகீஸ்வரன்**

கோண்டாவில் (Kondavil) இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வலிகாமம் பிரிவில் உள்ள ஒரு ஊர். யாழ்ப்பாண நகரில் இருந்து ஏறத்தாழ 3.5 மைல்கள் தொலைவில் அமைந்துள்ள இந்த் ஊரை ஊடறுத்து யாழ்ப்பாண நகரில் இருந்து வடக்கு நோக்கி காங்கேசன்துறை வீதியும், பலாலி வீதியும் செல்கின்றன. இவ்வூருக்கு தெற்கு எல்லையில் கொக்குவில், திருநெல்வேலி ஆகிய ஊர்களும், வடக்கில் இணுவில், உரும்பிராய் என்னும் ஊர்களும் உள்ளன. கிழக்குத் திசையில் இருபாலை அமைந்துள்ளது.இவ்வூரில் உள்ள ஓர் பிரபல்யமான பாடசாலையே கோண்டாவில் இந்துக் கல்லூரி. 1878 இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பல்துறைசார் விருத்தி கண்டு வருகின்றது.




(உப அதிபர்)


**இ.அருணகிரிவாசன்**

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு-2014

## தோற்றியோர் எண்ணிக்கை - 27




## க.பொ.த.(உ/த) பரீட்சைப் பெறுபேறு-2013





## விளையாட்டுத் துறை சாதனைகள்

- செல்வன். க:டிலக்சன்(15 வயதின் கீழ் ஆண்)

| | உயரம் பாய்தல் | நீளம் பாய்தல் | 100m |
|---|---|---|---|
| கோட்டம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| வலயம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| மாவட்டம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| மாகாணம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| தேசியம் | 4ஆம் இடம் | 7ஆம் இடம் | - |

## க.பொ.த.(சா/த) பரீட்சைப் பெறுபேறு-2013




**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2014 இல் 100 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்கள்**

*ர.அபிகா-154*
*ப.சஞ்சிகா-145*
*சு.ஆகாஷ்-140*
*ஜெ.மிதுஜா-139*
*சி.கஸ்தூர்ரி-135*
*ந.சுஜீபன்-135*
*ச.அஸ்வினி-135*
*சு.கிருஷ்ணரதன்-135*
*க.பிருந்தன்-132*
*வி.சுகந்தன்-131*
*உ.தர்மிகன்-131*
*சி.ரஜிகரன்-128*
*ச.சுலக்ஷனா-122*
*ச.அபிஷா-117*
*லூ.பிரவீனா-116*
*இ.வைஸ்ணவி-112*
*ரூ.சௌமிகன்-111*
*ப.யாதவன்-103*
*ரூ.மியூசிகன்-103*




## மாகாணமட்ட சாதனைகள்



செல்வி சா. ஆஷிக்கா விசேட கல்வி பிரிவு மாணவருக்கான தனி நடனத்தில் மாகாண மட்டத்தில் 2 ஆம் இடம்

## தமிழ்த் தினப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள்

| மாணவர்கள் பெயர் | பிரிவு | நிகழ்ச்சி | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|
| ர.அஜானி | 2 | பேச்சு | 3ஆம் இடம் | |
| தே.டயானி | 4 | பாவோதல் | 3ஆம் இடம் | |
| உ.ரசிந்தா | 5 | பாவோதல் | 3ஆம் இடம் | |
| ச.டிலக்சனா | 2 | தனி நடனம் | 2ஆம் இடம் | |
| நி.டிலக்சனா | 3 | தனி இசை | 3ஆம் இடம் | |
| குழு(திறந்த போட்டி) | | நாட்டார் பாடல் | 2ஆம் இடம் | |
| குழு(திறந்த போட்டி) | | மேடை நாடகம் | 2ஆம் இடம் | |
| இ.கேதீஸ்வரன் | | சித்திரப்போட்டி | 2ஆம் இடம் | 2ஆம் இடம் |

# மாற்றுவலுவுடையோரின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை வழங்க நடவடிக்கை

நாட்டில் நலிவுற்ற மக்கள் பிரிவினரான ஊனமுற்றோர்,ஆதரவற்றோர்,முதியோர் ஆகியோரால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு தடங்கலற்ற முறையில் நேரடியாக சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்து பொருளாதாரத்தை மேம்படுத்த் சமூக சேவைகள் அமைச்சு வழி செய்து கொடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நலிவுற்ற மக்கள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்துகொள்ளவும் வருவாயீட்டிக் கொள்ளவும் மற்றவர்களில் தங்கியிருப்பதனை தவிர்த்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும் எதிர்காலத்தில் அரச வர்த்தக நிறுவனங்களான லக்சல,சதொச உள்ளிட்ட அனைத்து வணிக நிலையங்களிலும் இவ்வாறானவர்களது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து அதனால் பெறப்படும் வருவாயை அவர்களுக்கு நேரடியாகவே வழங்க வகை செய்யப்படவுளது. இதன் மூலமாக நலிவுற்ற மக்களின் சுய தொழில் முயற்சிகள் சந்தை வாய்ப்பு இல்லாமல் பாதிப்புறுவது தவிர்க்கப்பட முடியும். எனத்தெரிவிக்கப் படுகிறது. (90)

# சேவையிலுள்ள ஆசிரியர்களின் சுயவிபரம் கோரல்

(அச்சுவேலி)

இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரியர்களை மீளமைக்கப்பட்டுள்ள ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பினுள் உள்ளீர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு அவ்விண்ணப்பங்கள் மீளவும் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தும் நடவடிக்கைகள் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்உள்ளீர்ப்பு செயற்பாட்டிற்கமைவாக தற்சமயம் பணியிலுள்ள ஆசிரியர்களின் சுயவிபரங்கள் சேகரிக்கப்படும் அதேவேளை ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் விபரங்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு திரட்டப்பட்டு வரும் தகவல்களுக்கமைய ஆசிரியர்களின் தரங்களிற்கு ஏற்ப அவர்களுக்கான சம்பளங்கள் புதிதாக மீளமைப்புச் செய்யப்பட்டு எதிர்வரும் 2015 ஆம் ஆண்டின் முற்பகுதியிலிருந்து திருத்தியமைக்கப்பட்ட சம்பளப்படிமுறைக்கமைய சம்பளங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது, (03)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு படையினரால் உணவு வழங்கல்


(யாழ்ப்பாணம்)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்.நாவாந்துறை மக்களுக்கு விஷேட அதிரடிப் படையினரால் இரவு உணவு வழங்கப்பட்டுள்ளது.

விஷேட அதிரடிப் படையின் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட கொமாண்டர் வி.ஏ.எஸ் பெரேராவின் ஏற்பாட்டில், யாழ். மாவட்ட கொமாண்டர் வி.எஸ்.எஸ் பீரிஸ் தலைமையில் நேற்று முன்தினம் உணவுகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். நாவாந்துறை பொம்மை வெளி மற்றும், வசந்தபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தங்கவிடப்பட்டுள்ளனர். அவர்களில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 100 அங்கத்தவர்களுக்கு இரவு உணவு மற்றும் குடிநீர் என்பன வழங்கப்பட்டன. (25)

## வெள்ளி நற்சிந்தனை...



# பெரியபுராணத்து அடியவர்கள் - 04

பெரிய புராணம் பற்றிக் கண்டவற்றை அமைதியாக இருந்து சிந்தித்தால் ஓர் உண்மையை விளங்கிக் கொள்ள முடியும். ஏனைய சமய நூல்களைப் போல அதாவது தேவாரம், திருவாசகம், நாலாயிர பிரபந்தம், அஷ்டப் பிரபந்தம் முதலிய நூல்களைப் போல சமய அடிப்படையில், குறிப்பிட்ட சமயத்தை வளர்ப்பதற்காகவும், அதனுடைய பெருமையைச் சொல்வதற்காகவும், அதை நம்புகிறவர்கள் இறைவனுடைய திருவடியைச் சேர்வதற்குரிய வழியைக் காட்டுவதற்காகவும், அந்தச் சமய நூல்கள் பணி புரிந்தது போல சேக்கிழார் நூல் இல்லை என்பதை அறிந்து கொள்ள முடியும். என்ன காரணத்தினாலோ பின்னால் வந்தவர்கள் இதை பன்னிரண்டாம் திருமுறை என்று சைவத்திருமுறைகளிலே சேர்த்தார்களே தவிர பெரியபுராணத்தின் அடிநாதமாக விளங்குவது சைவ சமயத்தை வளர்ப்பது என்பது முக்கியமாகத் தெரியவில்லை. சைவ சமயக் கொள்கையின் அடிப்படையில் வாழ்ந்த அடியார்களைச் சொல்வது தான் பெரிய புராணம் என்பதை மறுப்பதற்கில்லை. சைவத்தின் பெருமையையும் பெரிய புராணம் பேசுகின்றது. என்பதிலும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அதைவிட முக்கியமாக பெரிய புராணம் எதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. என்றால் இந்தத் தமிழ் மக்களைத் திருத்துவது தான் அதனுடைய முக்கிய குறிக்கோளாகும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் தமிழினம் கீழே விழுகின்ற நிலைமை அடைந்து விட்டது. சோழர்கள் மறையப்போகின்ற சூழ் நிலை உருவாகிவிட்டது. என்பதை அறிந்த சேக்கிழார் இந்தத் தமிழ் மக்களுக்கு ஒரு வழி காட்ட வேண்டும். குறிக்கோள் இறையன்பு, தொண்டு ஆகியவற்றை அவர்கள் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் காட்டத் தான் பெரிய புராணத்தை இயற்றினார் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். ஆகவே சமய நோக்கத்தை விட சமுதாய நோக்கம் தான் அவருடைய முக்கிய குறிக்கோளாக இருந்தது. என்பதைப் புரிந்து கொள்வோமேயானால் தவறு ஒன்றுமில்லை. இவ்வாறு சொல்வதனால் பெரியபுராணத்தினுடைய சமய அடிப்படையையோ, நோக்கத்தையோ குறை கூறுவதாக யாரும் நினைத்து விட வேண்டாம் சேக்கிழாரைப் பொறுத்தமட்டில் தேவார திருவாசகங்களை நன்கு பயின்றிருந்தார். ஆதலால் சமயத்தை வளர்ப்பதற்கு இவை போதுமானவை என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். புதியதாக ஒரு காப்பியத்தை இயற்றி அந்தச் சமயத்தை வளர்க்க வேண்டுமென்ற சூழ்நிலை தேவையே இல்லை. அது உருவாகவில்லை. ஆகவே தான் அவர் மக்களை நல்வழிப்படுத்தி சிறந்த வாழ்க்கை உடையவர்களாகச் செய்தால் அது சமய வாழ்க்கையைத் தானே கொண்டு வரும் என்பதனை அறிந்திருந்தார். ஆகையால் பெரிய புராணத்தின் குறிக்கோளாக சமுதாய வளர்ச்சி–சமுதாயம் சிறந்த முறையில் முன்னேறிச் செல்வதைத் தம்முடைய வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார் என்பதனை அறிந்து கொள்வோமேயானால் அது பெரிய புராணத்தை உள்ளவாறு அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

தமிழ் எழுத்தாளர்களின் சந்தை மதிப்பு எப்படி உள்ளது? கடந்த 50 ஆண்டுகளில் தமிழின் முழு நேர எழுத்தாளர்கள் என்று ஒரு பட்டியல் தயாரித்தால், பத்துப் பேராவது தேறுவார்களா என்று தெரியவில்லை. தி. ஜானகிராமன் வானொலியில் வேலை பார்த்தார். அசோகமித்திரன் ஜெமினி ஸ்டுடியோவில் பணியாற்றினார். இந்திரா பார்த்தசாரதி டெல்லி பல்கலைக்கழகத்திலும் ஜி. நாகராஜன் மதுரைத் தனிப் பயிற்சிக் கல்லூரிகளிலும் பயிற்றுவித்தார்கள். வண்ணநிலவனுக்குப் பத்திரிகைத் தொழில், வண்ணதாசனுக்கு வங்கிப் பணி. பி.ஏ. கிருஷ்ணனும் தியடோர் பாஸ்கரனும் நல்ல உத்தியோகங்களிலிருந்து ஓய்வு பெற்றபின்புதான் தீவிரமாக எழுதுகிறார்கள். எழுத்து இங்கே ஒரு தொழிலில்லை.

சுந்தர ராமசாமி ஒரு முறை இப்படிச் சொன்னார். ஒரு பெட்டிக் கடைக்காரரர் எழுத்தாளராகவும் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். நாலு பேர் சந்திக்கிற இடத்தில் யாரேனும் 'நீங்கள் என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டால், அவர் ஒரு போதும் 'நான் ஒரு எழுத்தாளன்' என்று சொல்ல மாட்டார். அது சமூகத்தில் அவருக்கு மரியாதையை ஈட்டித்தருவதில்லை.

எட்டு ஆண்டுகள் இருக்கும். அ. முத்துலிங்கத்தின் கதை ஒன்றைப் படித்துப் பிரமித்துப்போய் அவருக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பினேன். உடன் பதில் எழுதினார். அதுவே, ஓர் இலக்கியப் படைப்பைப் போல இருந்தது. அன்றிரவே சாப்பாட்டு மேசையில் அதைப் பகிர்ந்துகொண்டேன். ஹொங்கொங்கில் வளர்ந்த என் மகனுக்கு அவரது மறுமொழியின் உள்ளடக்கத்தைவிட, ஓர் எழுத்தாளர் தனது விசிறிகளுக்குப் பதில் எழுதுகிறார் என்பதுதான் வியப்பாக இருந்தது. எழுத்தை மதிக்கும் சமூகங்களில் எழுத்தாளர்களை எளிதில் தொடர்புகொண்டு விட முடியாது. இங்கே நாஞ்சில் நாடன் தனது செல்பேசி, இல்பேசி எல்லாவற்றையும் அவரது இணையதளத்தில் போட்டுவைத்திருக்கிறார். ஒரு தமிழ் வாசகர் எழுத்தாளரைத் தொலைபேசியில் அழைப்பதற்கு எங்கே மெனக்கெடப் போகிறார் என்கிற தைரியம்தான் காரணமாக இருக்க வேண்டும்.

– மு. இராமநாதன்

என் 27–ஆவது வயதில் இலக்கிய வெளிவட்டம் என்ற பத்திரிகையில் ஃப்ரெஞ்ச் தத்துவம் பற்றி எழுதினேன். அதை நடத்திக் கொண்டிருந்த நடராஜன் ஒரு கல்லூரிப் பேராசிரியராக இருப்பார் என்று நினைத்தேன். அப்போது அதுதான் பழக்கம். இல்லாவிட்டால் வங்கி உத்தியோகம். மற்ற வேலைகளில் இருப்பவர்கள் வாங்கும் 500 ரூபா சம்பளத்தில் பத்திரிகை நடத்துவது சிரமம். 300 பிரதி அச்சடித்து தபாலில் அனுப்புவார்கள். எல்லாம் பத்திரிகை ஆசிரியர் செலவு. மீட்சி அப்படித்தான் நடந்தது. படிகள், நிறப்பிரிகை எல்லாமே அப்படித்தான் நடந்தன. ஒரு இலக்கியச் சந்திப்பில் நடராஜனைச் சந்திக்க நேர்ந்த போதுதான் அவர் என்ன வேலை பார்க்கிறார் என்று தெரிந்து கொண்டேன். ஒரு ஓட்டை தையல் மெஷினை வைத்துக் கொண்டு கிழிந்த ஜாக்கெட்டுகளுக்கு ஒட்டுப் போடும் வேலை செய்து கொண்டிருந்தார். புது ஜாக்கெட் தைக்க மாட்டீர்களா என்று கேட்டேன். அதற்கெல்லாம் அந்த மெஷினில் முடியாது என்றோ என்னவோ பதில் சொன்னதாக ஞாபகம்.

அவரிடம் நான் என் கட்டுரைக்குக் காசு கேட்க முடியுமா? படிகள், மீட்சி, நிறப்பிரிகை எல்லாமே சில தனி நபர்களின் தியாகத்தினால் நடந்த செயல்பாடுகள்தான். இலங்கைக்குப் பாலம் கட்டி விட்டு ராமரிடம் போய் யாரும் காசு கேட்டார்களா? கேட்டதாக கதை இருக்கிறதா? இது எல்லாமே தமிழுக்கும் இந்த சமூகத்துக்கும் நாங்கள் செய்த சேவை.

ஆங்கிலத்தில் ஒரு வார்த்தைக்கு ஏழு ரூபாய் கொடுக்கிறார்கள். ஆயிரம் வார்த்தைகள் ஒரு கட்டுரை. 7000 ரூ. கிடைக்கும். இதுவே மிகக் குறைந்த பட்ச சன்மானம். ஃப்ரெஞ்சில் ஒரு வார்த்தைக்கு 15 ரூ. வாங்குகிறார்கள். ஆனால் இங்கே 5 இலட்சம் பிரதிகள் விற்கும் ஜனரஞ்சகப் பத்திரிகையே 3000 வார்த்தைகள் கட்டுரைக்கு 1000 ரூ. தான் சன்மானம் கொடுக்கிறது. லாபமே இல்லாமல் நடத்தப்படும் உயிர்மை போன்ற பத்திரிகைகளில் எதையும் எதிர்பார்க்க முடியாது.

எழுத்தாளனுக்கு உரிய ஊதியம் கொடுக்கும் சமூகச் சூழல் இங்கே இல்லை. – சாரு நிவேதிதா

# கடல்வாழ் உயிரின வளர்ப்பு கிளி.இல் 50 குடும்பங்கள் தெரிவு

(கிளிநொச்சி)

கடல்வாழ் உயிரின வளர்ப்புக்காக கிளிநொச்சியில் 50 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் கடனடிப்படையில் மானியம் வழங்கப்படவுள்ளதாக, மாவட்ட நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் அதிகாரி எஸ்.சலீபன் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின், திவிநெகும திட்டத்தின் கீழ் 1 ஆம் கட்டமாக 50 பயனாளிகள் தற்போது தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு நங்கூரங்கள், மூங்கில் கூடுகள், வலைகள் போன்ற உபகரணங்கள் அடுத்த வாரம் முதல் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், பாசி வளர்ப்புக்காக ஹேலீஸ் நிறுவனத்தால் கடனடிப்படையில் 13 ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியான பாசியும் வழங்கப்படவுள்ளதுடன், அந்தக் கடனை பெறுபவர்கள் பாசிகளின், அறுவடையின் போது அதனை மீளச்செலுத்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இலஞ்சப்பட்டியலில் முன்னேறியது இலங்கை

டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனத்தினால் உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு வருடமும் தயாரிக்கப்படும் அதிக இலஞ்சம் பெறும் நாடுகளின் பட்டியலில் 2014ஆம் ஆண்டுக்கான தரப்படுத்தலில் இலங்கை 85ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

175 நாடுகளை மையப்படுத்தியே 2014ஆம் ஆண்டுக்கான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் 85ஆவது இடத்தில் இந்தியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளிரண்டும் இடம்பிடித்துள்ளன.

உலக வங்கி மற்றும் உலக பொருளாதார புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டே இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

2013ஆம் ஆண்டில் 177 நாடுகளை மையப்படுத்தி தயாரிக்கப்பட்ட பட்டியலில் இலங்கை 91ஆவது இடத்தைப் பிடித்திருந்தது.

இந்தப் பட்டியலின்படி. உலகிலேயே ஆகக் குறைந்த இலஞ்சம் பெறும் நாடாக டென்மார்க்கும் ஆகக்கூடிய இலஞ்சம் பெறும் நாடாக சோமாலியாவும் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதிப்பு

இலங்கை போக்குவரத்து சபையினால் புதிதாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருநதுக்கள் காரணமாக தனியார் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டை இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர கெமுனு விஜேரத்ன முன்வைத் துள்ளார்.

இதற்கு எதிராக எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மருத்துவர் மாயம்

(கொழும்பு)

கேகாலை போதனா மருத்துவமனையின் மருத்துவர் ஒருவர் நேற்று முன்தினம் முற்பகலில் இருந்து காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவராக, கேகாலை போதனா மருத்துவமனைக்கு கடந்த 27ஆம் திகதி, சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட நியமனத்தின் பேரில் இவர் பதவியேற்றார்.

இது தொடர்பில் மருத்துவமனையின் பணிப்பாளர், கேகாலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இந்த நிலையில், நேற்று முன்தினம் குறித்த மருத்துவர் ஹட்டன் புகையிரத நிலையத்தில் நின்றிருந்தார் என்று கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், கேகாலை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# உடுத்துறை மீனவர்களுக்கு மழை பாதுகாப்பு அங்கிகள்

யாழ். உடுத்துறை பகுதியிலுள்ள 100 மீனவர்களுக்கு இரண்டு மழை பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை பிரதிப் பணிப்பாளர் நடராசா கணேசமூர்த்தி தெரிவித்தார்.

மழை காலங்களில் கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு பாதுகாப்பு அங்கிகள் அவசியமாகின்றன. கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தில் காப்புறுதி செய்த 100 மீனவர்களுக்கு 2,500 ரூபாய் பெறுமதியான பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

மிகுதி மீனவர்களுக்கும் இவற்றைப் படிப்படியாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.



# பரமர் சங்கமம்

'இக்மன் கொட்டாய்' எண்டொரு சிங்கள வாக்கியம் உண்டு. அதன் அர்த் தம் 'அவசரம் கட்டை' என்பது ததான் பொதுவாக அவசரப்படுகிற காரியம் ஒண்டும் உருப்படாது அவசரத்தால் எடுகிற காரியம் நடைபெறா மல் தடைப்பட்டு விடுவதையும் கண்டிருக்கிறம்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னால் என்னென்னவோ எல்லாம் நடந்து முடிந்தும் விட்டது. எண்டில்லாமல் இன்னும் நடந்தும் கொண்டிருக்கு. இனிமேலும் புதிசு புதிசாக் கேள்விப்படவும் போறம்.

இதுக்கிடேல்லை ஜனாதிபதித் தேர்தல் நடை பெறாமல் போகும் உத்தரவை மேன்முறையீட்டு நீதி மன்றத்தால் போடக்கூடிய நிலையும் வந்திடும்போலை தெரியுது. ஏனெண்டா தேசிய சிங்கள பௌத்த மக்கள் கட்சி பொதுஜன வாக்கெடுப்பு நடத்தாமல் 18 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளார் மகிந்த அதனால் அரசமைப்பை அவர் மீறியுள்ளார்.

அதனால் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் தகுதியை இழந்துள்ளார். அவரை பதவி நீக்கம் செய்து விட வேண்டுமென ரிட்மனுவொன்றை மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதால் தேர்தல் தடை செய்யப்பட்டோ பின் போடப்போட்டோ விடவும் கூடலாம்.

இதனிடையே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவர் தாங்கள் அவசரப் படமாட்டம் எண்டு சொல்லி இருப்பதைப் பார்த்தால் வழமைபோல் தமிழர் பிரச்சினையில் அவசரப்படாமல் இருந்து ஏறத்தால 66 வருடங்களை பாராளுமன்றம், நாடாளுமன் றங்களில் கழித்த பழக்க தோசம் அவரை அப்படிப் பேச வைத்துள்ளதுபோல் விளங்குது.

அவர்கள் அவசரம் காட்டுவதெல்லாம் தத்தமது சுயநலனிலும், உறவுகளை தங்களின் அனுகூலங்க ளால் பாதுகாப்பான வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்து உயர்கல்வி மற்றும் தகுதி வாய்ந்த வேலை வாய்ப்பு, வாழ்க்கை வசதிகளைப் பெற்றுக்கொடுப்ப திலும் என்பது பகிரங்கமான தொண்டு.

பொதுசன வாக்கெடுப்பை 18 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வந்துள்ள நான்கு ஆண்டுகளிலும், நடத்தாமல் அவசரப்பட்டு மூன்றாவது முறையாகவும் மகிந்தர் போட்டியிட முனைந்துள்ளார். ஆனால் வடக்குக் கிழக்கு இணைப்பை தொடரவும் பொதுசன வாக்கெடுப்பு நடாத்தப் படாததைக் கவனித்து அவசர அவசரமாக வடக்குக் கிழக்கு இணைப்பை நடைமுறைப்படுத்தினார்.

அதுபோலவே புலிகளும் அவசரப்பட்டு 2005 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எடுத்த முடிவே அவர்களின் முடிவுக்குக் காலானதைக் குறிப்பிடலாம். அதாவது தமிழ் வாக்காளர் சிங்களவர்களுக்கு வாக்களிக்கவோ, சிங்களக் கட்சிகளில் தமிழர்கள் தேர்தலில் குதிக்கவோ கூடாதெண்ட முடிவு.

இக்மன் கொட்டாய் எண்டு சிங்களத்தில் சொன்னாலும் அவசரம் கட்டை எண்டு தமிழில் எடுத்துக் கொண்டாலும் அர்த்தம் ஒண்டுதானை என்ன நான் சொல்லுறே விளங்குதே...

# ஜனாதிபதித் தேர்தலால் முதலாம் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் பாதிக்காது




(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருந்தாலும், பாடசாலைகளில் அடுத்த வருடத்திற்கான முதலாம் தவணை கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகும் தினத்தில் எவ்வித மாற்றங்களும் இடம்பெறமாட்டாது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய, இன்றைய விடுமுறை வழங்கப்படும் அரச பாடசாலைகள் அடுத்த வருடம் ஜனவரி 5 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் அநுர திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்

ஜனவரி மாதம் 5 ஆம் 6 ஆம் திகதிகளில் பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளதோடு, ஜனாதிபதி தேர்தலுக்காக 7 ஆம், 8 ஆம் திகதிகளில் விடுமுறை வழங்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் பின்னரே இந்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அரச மருத்துவமனைகளில் சுவாச நோய் சிகிச்சை பிரிவு

சகல அரச மருத்துவமனைகளிலும் சுவாச நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கும் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.

சகல அரச வைத்தியசாலைகளிலும் அண்மைக்காலமாக சுவாச நோய்கள் அதிகரித்து வருகின்றன.குறிப்பாக குழந்தைகள் மத்தியில் இந்த நோய் அதிகமாக உள்ளது.

அசுத்தமான காற்றைச் சுவாசிப்பதால் 15 வீதமான குழந்தைகள் ஆஸ்மா நோயினால் அவஸ்தைப்படுகின்றன. புகைத்தலால் வெளியேற்றப்படும் புகையும் குழந்தைகளின் சுகாதாரத்தைப் பாதிப்பதாக டொக்டர் சமன் குலரத்ன தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் அமையவிருக்கும் சுவாச நோய் சிகிச்சைப் பிரிவுகள் நவீன மருத்துவ உபகரணங்களைக் கொண்டிருக்கும். ஏற்கனவே வைத்தியசாலைகளில் இத்தகைய 25 பிரிவுகள் உள்ளன. மேலும் அதிகமான பிரிவுகள் புதிதாக ஆரம்பிக்கப்படும்.

இலங்கையில் ஆஸ்மா நோய் காரணமாக மரணிப்போரின எண்ணிக்கை வளர்முக நாடுகளுடன் ஒப்பிடுகையில் 20 முதல் 50 வீதம் வரை அதிகமாகும்.

# கைது

(திருகோணமலை)

திருகோணமலை சாம்பல்தீவு சல்லி பிரதேசத்தில் வைத்து விடுதலைப்புலிகளின் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

32 வயதான ஸ்கந்தராஜா என்பவரே கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இவரை கொழும்புக்கு அனுப்பி விசாரணைகளை நடாத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஜனாதிபதித் தேர்தலில் 10 வேட்பாளர்கள் போட்டி

(கொழும்பு)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜனதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு 10 வேட்பாளர்கள் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்டுப்பணம் செலுத்திய வேட்பாள்ர்களில் 9 பேர் அரசியல் கட்சிகளின் சார்பிலும், ஒருவர் சுயேட்சையாகவும் போட்டியிட உள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிட மகிந்த ராஜபக்சவுக்கும், புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிட மைத்திரிபால சிறிசேனவுக்கும் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.


அதேவேளை, ஒக்கம வெசியோ, ஒக்கம ரஜவரு கட்சி சார்பில் தாமினிமுல்ல, சமாஜவாடி சமந்த கட்சி சார்பில் பானி விஜேவர்த்தன, ஐக்கிய சோசலிசக் கட்சி சார்பில் சிறிதுங்க ஜெயசூரிய, எக்சத் லங்கா மகா சபா கட்சி சார்பில் கலாநிதி நாத் அமரக்கோன், சிறிலங்கா ஜாதிக பெரமுன சார்பில் விமல் கீகன்னே, ஜனசெத பெரமுன சார்பில் பத்தரமுல்ல சீலாரத்ன தேரர், மற்றும் சுயேட்சையாக ஐ.எம்.இல்யாஸ் ஆகியோரும் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

28. நானும் எனது நண்பர்களும் எமக்கிடையே தீபாவளி வாழ்த்துக்களை மாறிமாறி அனுப்பி மகிழ்ந்தோம் அனுப்பப்பட்ட வாழ்த்துக்கள் 42 எனின் எனக்கு எத்தனை நண்பர்கள் உள்ளனர்?
1) 6 2) 7 3) 5

29. வரிசை ஒன்றின் முன்னால் இருந்து பார்க்கின்ற போது ஐந்தாகவும் பின்னாலிருந்து பார்க்கின்ற போது எட்டாவதாகவும் நின்றேன். வரிசையில் எத்தனை பேர் நின்றோம்?
1) 13பேர் 2) 14பேர் 3) 12பேர்

30. 
உருவில் உள்ள பிராணி பற்றிக்கூறக்கூடிய சரியான கூற்று யாது?
1) குட்டியீன்று இனம் பெருக்கும்
2) முட்டையிட்டு குஞ்சு பொரித்து பாலூட்டும்
3) மூங்கிலை விரும்பி உண்ணும்

31. குளங்கள் எல்லாம் நீரால் நிரம்பி இருந்தன இதற்கான காரணம்
1) நீண்டகால வறட்சி நிலவியமை
2) கடல் கொந்தளிப்பு ஏற்பட்டமை
3) அதிக மழை பெய்தமை

32. 
முகம் பார்க்கும் கண்ணாடியில் தோன்றும் நேரத்தை கடிகாரமுகம் காட்டுகிறது. அதன்படி கடிகாரமுகம் காட்டும் உண்மை நேரம் யாது?
1) 8மணி 30நிமிடம் 2) 4மணி 30நிமிடம் 3) 3மணி 30நிமிடம்

33.

| | | |
|---|---|---|
| 2 | | 9 |
| | 5 3 | |
| | 8 | |

கட்டத்தில் உள்ள மிகச்சிறிய ஒற்றை எண்ணையும், மிகப்பெரிய இரட்டை எண்ணையும் பெருக்கினால் வரும் விடை யாது?
..............................................

34. இ.பெ.கூ. என்ற சுருக்க குறியீட்டின் விரிவாக்கத்தை எழுதுக? ..............................

❖ முதலில் தரப்பட்ட கூற்றுக்கு மிகப்பொருத்தமான விடையை தெரிக

35. ஒருவருக்கு ஏற்பட்ட அச்சத்தை காட்டுவதற்கு உகந்த உவமைத்தொடரை தெரிக
1) ஓடும் புளியம்பழமும் போல
2) பசுமரத்தாணி போல
3) இடியோசை கேட்ட நாகம் போல

36. விளையும் பயிரை முளையில் தெரியும் என்பதன் கருத்து யாது?
1) பெரியவர்களாக வளர்வதற்கு சிறியவர்களுக்கு உதவுதல் வேண்டும்
2) பயிர் நன்றாக வளர நல்ல விதை தேவை
3) ஒருவரின் சிறுவயதுப்பழக்கங்களை வைத்து அவரை மதிப்பிடலாம்

கடந்த 03.12.2014 வெளியாகிய வினாக்களின் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 2 | 2. 1 | 3. 2 | 4. 3 | 5. 1 |
| 6. 2 | 7. 3 | 8. 3 | 9. 1 | 10. 3 |
| 11. 3 | 12. 2 | 13. 3 | 14. 1 | 15. 2 |
| 16. 1 | 17. 1 | 18. 1 | 19. 1 | 20. 2 |
| 21. 1 | 22. 3 | 24. 2 | 25. 2 | 26. 2 |
| 27. 3 | 28. 1 | 29. 2 | 30. 1 | 31. 2 |
| 32. 2 | 33. 1 | 34. 2 | 35. 3 | 36. 3 |
| 37. 1 | 38. 2 | 39. 3மணித்தியாலம் | | |
| 40. புள்ளி வழங்கவும் | 41. 1 | | | |

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



தரம் - 4 பரீட்சை முன்னோடி- 2014


பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



1 தொடக்கம் 36 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

❖ 01. முதலில் தரப்பட்ட மூன்று உருக்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது. இவ்வுருக்களுடன் தொடர்புடைய விடையை தெரிக




❖ 02. கூடுகளில் குறுக்காகவும் மேலிருந்து கீழாகவும் மூன்று எழுத்துக்கள் கொண்ட மூன்று சொற்கள் உருவாகும் வகையில் வெற்றிடத்துக்கு பொருத்தமான சொல்லை தெரிந்து கோடிடுக


| | | |
|---|---|---|
| அ | | து |
| சோ | | ம் |
| கு | | பி |

1) வ / ள / ம் 2) மு / தி / ரை 3) மு / க / ம


03. நிறங்கள், பச்சை, மஞ்சள், என்பவற்றுக்கிடையிலான தொடர்பை காட்டும் உருவை தெரிவு செய்க



04. விபுலனின் ஊருக்கு ஒரு பேருந்து மட்டுமே தவறாது சேவையில் ஈடுபடுகின்றது. காலையில் பாடசாலை மாணவர்களையும், வேலைக்குச் செல்பவர்களையும் ஏற்றிவரும் பேருந்து மாலை 5 மணிக்கு மீண்டும் ஊருக்கு திரும்பி வரும். தினமும் தவறாது பாடசாலைக்கு வரும் விபுலன் இன்னும் பாடசாலைக்கு வரவில்லை இதற்கான காரணம்
1) பேருந்து தரிப்பிடத்தில் நிற்காமல் சென்றமை
2) பேருந்து சேவையில் ஈடுபடாமை
3) பேருந்தை அவன் தவறவிட்டமை

05. 
இவ்வுருவை பூரணப்படுத்த எத்தனை கனவுரு குற்றிகள் தேவை?
1) 18 2) 27 3) 24

06. தரப்பட்ட கூட்டல் செய்கையில் ✠ ☯ ஆகிய உருக்களுக்குரிய பெறுமானம் முறையே




1) 1,3 2) 2,3 3) 3,4

07. முயற்கொம்பு தேடி அலைந்தது போல என்பதற்கு பொருத்தமான சந்தர்ப்பம் எது?
1) இல்லாத பொருளை தேடி அலைதல்
2) அலைந்து திரிந்து தேடிய பொருளைப் பெறுதல்
3) பொருளை இலகுவாகப் பெற்றுக்கொள்ளல்

08. சங்கீதா ஒவியாவிலும் பார்க்க 30 ரூபா கூடுதலாக வைத்திருந்தாள். சித்திரா சங்கீதாவை பார்க்க 10 ரூபா குறைவாக வைத்திருந்தாள். சங்கீதா, வைத்திருந்த பணத்தொகை ரூபா 70 எனின் மூவரும் வைத்திருந்த மொத்த பணத்தொகை யாது?
1) 200 ரூபா 2) 180 ரூபா 3) 170 ரூபா

09. திவ்யாவுக்கு மூன்று சகோதரிகளும் நான்கு சகோதரர்களும் உள்ளனர். அதன்படி திவ்யாவின் பெற்றோருக்கு எத்தனை பிள்ளைகள்?
1) 7 2) 8 3) 6

10.




சதுரவடிவக் காணியில் நிழற்றப்பட்ட பகுதியை உழுவதற்கு ரூபா 150 செலவானது எனின் சதுர வடிவக்காணியை முழுமையாக உழுவதற்கு தேவையான மொத்தப்பணம் யாது?
1) ரூபா 1350 2) ரூபா 900 3) ரூபா 1200


❖ கீழே தரப்பட்ட கூற்றுக்கள் தொடர்பான சரியான விடையின் கீழ் கோடிடுக

11. A - ஒலிம்பிக் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்
B - சந்திரகிரகணம் பௌர்ணமி நாளில் ஏற்படும்
1) A மட்டும் சரி 2) B மட்டும் சரி 3) A உம் B உம் சரி

12. A - இலங்கைக்கு கிழக்கே ஆபிரிக்க நாடுகள் உள்ளன
B - பூமிக்கு மிக அண்மையில் உள்ள கோள் சுக்கிரன் ஆகும்
1) A மட்டும் சரி 2) B மட்டும் சரி 3) A உம் B உம் சரி


13. இம்ரானின் சேர்விலக்கம் ஆறு இலக்கங்களை கொண்டது. முதலாம், மூன்றாம் இலக்கங்கள் ஒற்றை எண்கள் இரண்டாம் இலக்கம் ஆறாம் இலக்கத்தின் நான்கு மடங்காகும். நான்காம் ஐந்தாம் இலக்கங்களின் கூட்டுத்தொகை ஒன்பதாகும். இம்ரானின் சேர்விலக்கம் யாது?
1) 725638 2) 583452 3) 135279

14.



சதுரம் ஒன்றின் ஒருபக்கநீளம் அடிமட்டத்தின் Cm அளவினால் காட்டப்பட்டுள்ளது. சதுரத்தின் சுற்றளவு யாது?
1) 9cm 2) 12cm 3) 6cm

15.



தரப்பட்ட கணிதச்செய்கையின் 3 ⊠ 4 ⋇ 8 ⊗ 7 = ? படி வினாக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய விடை யாது?
1) 11 2) 7 3) 13



16. ZYXWVU ☐ PONM வெற்றுக்கட்டத்தினுள் வரவேண்டிய ஆங்கில எழுத்துக்கள் எவை?
1) QRST 2) TSRQ 3) TRLS

❖ பின்வரும் பந்தியை வாசித்து 17 முதல் 19 வரையான வினாக்களுக்கு விடையை தெரிவு செய்க

உங்கள் அனைவரினதும் சுகம் அறிய ஆவலோடு காத்திருக்கின்றேன். நான் இங்கு வந்து இப்போது ஏறக்குறைய இரண்டு மாதங்களாகி விட்டன. தங்குமிடத்தில் உணவு பரவாயில்லை எனினும் வீட்டை விட்டு தூர இடத்தில் வாழ்வது கவலை தான் மாலைவேளையில் ஏனைய மாணவர்கள் விளையாட போனாலும் நான் அதிக நேரம் புத்தகம் படிப்பதில் செலவாக்கி விடுகின்றேன்


17. இக் கடிதத்தை எழுதியவர் இப்பொழுது இருப்பது வெளிநாட்டிலாகும்
1) சரி 2) பிழை 3) கூறமுடியாது

18. இக்கடிதத்தை எழுதியவர் கல்விக்காக வீட்டை விட்டு வேறிடத்தில் வசிப்பவராவர்
1) பிழை 2) கூறமுடியாது 3) சரி

19. இக்கடிதம் அவரது வீட்டில் உள்ள ஒருவருக்கே எழுதப்பட்டுள்ளது
1) கூறமுடியாது 2) பிழை 3) சரி


❖ கீழே சில உருக்களின் பெறுமானங்களின் கூட்டுத்தொகை நிரலாகவும் நிரையாகவும் தரப்பட்டுள்ளது

20.




-?- இக்குறியீடு இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய எண் யாது?
1) 17 2) 18 3) 16


21.




✳ இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 3 2) 4 3) 1

22. யாழ்ப்பாணம் நல்லூரில் வசிக்கும் ராகவிக்கு அவளது தந்தை இந்தியாவில் இருந்து கடிதம் ஒன்றை அனுப்பினார். அவர் எழுதிய முகவரியின் இறுதியில் எழுதுவேண்டியது?
1) நல்லூர் 2) யாழ்ப்பாணம் 3) இலங்கை

23.




நிழற்றப்பட்ட பகுதிக்கு வரவேண்டிய எண்களை தெரிவு செய்க
1) 25,16 2) 3,15 3) 1,36

❖ ஒவ்வொரு வினாக்களிலும் உள்ள கூற்றுக்கள் எப்போதும் உண்மையானது எனின் (S) எனவும் சில வேளைகளிலும் மட்டும் உண்மையானவை எனின் (M) எனவும் ஒருபோதும் உண்மையாக இருக்காது எனின் (T) என்வும் அடையாளமிடுக


24. பூமி சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றி வருகிறது ( )

25. இரண்டு ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை ஓர் ஒற்றை எண்ணாகும் ( )

26. பூக்கின்ற தாவரங்கள் காய்க்கின்றன ( )

27. கரப்பந்தாட்ட அணி ஒன்றில் உள்ள ஆறு வீரர்கள் தமக்கிடையே மாறிமாறி கைகுலுக்கிக் கொண்டார்கள் எனின் அங்கு இடம்பெற்ற கைக்குலுக்கல்கள் எத்தனை?
1) 30 2) 15 3) 21

# இலங்கைக்கு எடுத்துவரப்படுகிறது சாயிபாபாவின் பாதுகை



பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் சிவசக்தி பாதுகையை இலங்கைக்கு கொண்டு வந்து 10 நாட்கள் இலங்கையில் வைத்து பூஜிக்க கொழும்பு ஸ்ரீ சத்தியசாயிபாபா மத்திய நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

அந்தவகையில் இன்று வெள்ளிக்கிழமை மதுரை ஸ்ரீ சத்திய சாயிபாபா நிறுவனத்திலிருந்து இப்பாதுகை இலங்கைக்கு எடுத்துவரப்படுகிறது.

இப்பாதுகை இதுவரை 27 உலகநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் இன்று இலங்கைக்கு எடுத்துவரப் படவுள்ளது.

கொழும்பிலுள்ள சத்தியசாயி நிலையத்தில் பௌர்ணமி தினமான நாளை காலை 8 மணிக்கு பாதுகைக்கான பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளதுடன் சாயி பக்தர்களினால் பாதுகைக்கு அபிஷேகம் செய்வதற்கான ஏற்பாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக சாயி நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

# பூநகரி 6 ஆம் குறுக்குத்தெரு வீதியின் புனரமைப்பில் பாரபட்சம் காட்டப்படுகிறதா?

## கேள்வி எழுப்புகின்றனர் பிரதேச மக்கள்

(பூநகரி)

பூநகரி பிள்ளையார் நகர் (4 ஆம் கட்டை) 6 ஆம் குறுக்கு வீதி நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாது சேதமடைந்த நிலையிலேயே காணப்படுவதாகவும் இதனால் இவ்வீதியூடாக போக்குவரத்து செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக இப்பிரதேச மக்கள கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதி குண்டும் குழியுமாக காணப்படும் நிலையில் மழைகாலங்களில் இவ்வீதியில் வெள்ள நீர் தேங்கி காணப்படுவதுடன் இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவ்வீதியூடாக வாகனங்களிலோ துவிச்சக்கரவண்டிகளிலோ செல்லமுடியாது நடந்தே செல்லவேண்டிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கும் மக்கள் நாளாந்தம் இவ்வீதியூடாக பாடசாலை மாணவர்கள் தொழிலுக்கு செல்வோர் வியாபாரிகள் எனப் பலர் பல்வேறு சிரமத்தின் மத்தியில் செல்வதாக சுட்டிக்காடுகின்றனர்.

இதேவேள்ள இப்பகுதிக்கு மின்சார விநியோகமும் இதுவரை வழங்கப்படாத நிலையில் கா.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் மண்ணெண்ணை விளக்கில் கல்வி கற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கும் இப் பிரதேச மக்கள் மின்விநியோகம் தொடர்பாக தாம் சம்பந்தப்பட்டவர்களுக்கு பலமுறை தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.



கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்ற நிலையில் இவ்வாறான கிராமப்புற உள்ளக வீதிகளின் புனரமைப்பு மற்றும் மின்விநியோகம் குறித்து அரச அதிகாரிகள் கவனம் செலுத்தாமல் பாரபட்சம் காட்டுவது கவலை அளிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



திருநாவற்குளம் வவுனியாவைச் சேர்ந்த ஆர்.எம்.யோகராஜா கடந்த வருடம் மே மாதம் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சமூக சேவையில் ஈடுபாடுடைய இவர் அரச சேவையில் [illegible]தான முகாமை உதவியாளராக நிர்வாக உத்தியோகத்தராக பிரதேசசபை செயலாளராக கடமையாற்றியுள்ளதுடன் சனசமூக நிலைய தலைவராகவும் ஆலய அறங்காவலர் சபை உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார்.

# மாணவர்கள் கௌரவிப்பு

நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் புலமைப்பரிசில் பரீட்சையில் தரம் 5 சித்தியடைந்த மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முனதினம் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் த.பாக்கியநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இப்பாடசாலையில் 160 புள்ளியைப் பெற்று சித்தியடைந்த வசந்தரூபன் யதுர்சன் மற்றும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 8 மாணவர்களும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதில் வகுப்பாசிரியர் ஆர்.ஜெயப்பிரியா, யதுர்சனுக்கு துவிச்சக்கரவண்டிய வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சத்தியலோஹினி வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன், நெடுங்கேணி பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (40)

# வடக்கின் கல்வி அபிவிருத்தி குறித்து உலக வங்கியின் பிரதிநிதிகள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

அறிவினை மையமாகக் கொண்டு பாடசாலைக் கல்வியினை மேம்படுத்தல் செயற்றிடட்த்தின் கீழ் (TSEP) உலக வங்கியின் செயறபாடுகள் மற்றும் கண்காணிப்பு ஆதரவு குழு ஒன்று (OMSU) திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக மீளாய்வு செய்வதற்காக கடந்த வாரம் வடமாகாணத்திற்கு விஜயம் செய்து கல்வி நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தது.

இக் குழுவில் திட்ட இணைப்பாளர் OMSU/TSEP கலாநிதி. ஜே.எல்.இரட்ணசேகர, உலக வங்கி அதிகாரிகள் திருமதி. விசாகா திஸநாயக்கா, எம்.முத்தையா மற்றும் எல்.ஜெயவர்த்தன மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் TSE ஆலோசகர் எம்.முத்தையா ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர்.

இக்குழுவானது வட மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி.ஆர்.விஜயலட்சுமியுடன் பிரதம செயலாளர் அலுவலகத்தில் கலந்துரையாடலை மேற்கொண்டனர். இக்கலந்துரையாடலில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பிரதிப் பிரதம செயலாளர் - (நிதி) ஆர்.பத்மநாதன், பிரதிப் பிரதம செயலாளர் - (திட்டமிடல்) ஆர்.உமாகாந்தன், மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ. இராஜேந்திரன், மாகாண கட்டடங்கள் பணிப்பாளர் எந்திரி. எஸ். மோகனதேவன், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கணக்காளர்கள் ஆகியோர் இக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்


# சிவன் ஜோதியாய் தோன்றிய திருக்கார்த்திகை இன்றாகும்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளாகிய சிவபெருமானின் திருவருள் பெற உதவும் சிவத்திருநாட்களில் இன்றைய கார்த்திகை விளக்கீடும் ஒன்றாகும். கார்த்திகை மாதத்தில் வருகின்ற கார்த்திகை நட்சத்திர நாளே விளக்கீடாகும்.

இந்தக் கார்த்திகையானது தனிப்பெருமையுடையது. ஒவ்வொரு மாதமும் கார்த்திகை வந்தாலும் இந்தக் கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகையே திருக்கார்த்திகை எனப்படுகின்றது. இநதக் கார்த்திகை எல்லோராலும் விரும்பிக் கொண்டாடப்படுகின்றது.

இறைவன் ஒளிமயமானவன் ஆதலால் அவனை ஒளிவடிவில் கண்டு வணங்குவதே இந்தக் கார்த்திகை விளக்கீட்டின் பெருமையாகும். இதனாலேயே மனிதர் தாம் வாழும் வீடுகளிலும் தொழில் நிலையங்களிலும் மற்றும் எல்லா இடங்களிலும் இன்றைய கார்த்திகை விளக்கீட்டு நன்னாளில் தீபங்களை ஏற்றி வைத்து வழிபாடியற்றுகின்றனர்.


மேலும் இந்தத் திருக்கார்த்திகை விளக்கீடு சர்வாலயதீபம் என்றும் குமாராலய தீபம் என்றும் விஷ்ணுவாலயதீபம் என்றும் மூவகையில் கொண்டாடப்படுகினறது. எல்லா ஆலயங்களிலும விளக்கீடு நிகழ்வதை சர்வாலயதீபம் என்றும் முருகன் ஆலயங்களில் நிகழ்வதை குமாராலய தீபம் என்றும் மகா விஷ்ணு ஆலயங்களில் நிகழ்வதை விஷ்ணுவாலய தீபம் என்றும் வழங்குவர்.

இன்றைய விளக்கீட்டு நன்னாளில் கோவில்களில் "சொக்கப்பானை" என்று கூறி ஒரு பெரிய ஓலைக் கூடானது தீயிடப்படுகின்றது. அது தீப்பற்றி எரியும் போது அந்தச் சுடர் ஒளியிலே ஆண்டவனை வணங்கி மகிழ்வர் இது சொர்க்கப்பனை என்ற சொல்லே காலப்போக்கில் "சொக்கப்பானை" என்று மருவிற்று எனச் சொல்லுவாரும் உளர்.

அத்துடன் • சிவபெருமான் தாமே பரப்பிரம்மம் என்பதை நிரூபிக்க சோதிப் பிழம்பாய் நின்றதாக புராணம் கூறுகின்றது ஒருமுறை பிரம்மாவும் விஷ்ணுவும் தாமே பெரியவர் என்று தமக்குள் அடிபட்டுக் கொண்டனர்.

உடனே சிவபெருமான் ஒரு சோதிப் பிழம்பாய்த் தோன்றி "பிரம்ம விஷ்ணுவே! இந்தச் சோதியின் அடியையோ அன்றி முடியையோ யார் காண்கின்றார்களோ அவரே பெரியவர் என்றாராம்.

அது கேட்ட பிரம்மா அன்னப்பறவையாய் மாறி தான் முடியைக் காண்பதாகக் கூறிவானிலே மேல் நோக்கிப் பறந்தாராம். விஷ்ணு பன்றி உருக்கொண்டு நிலத்தைத் துளைத்துக் கொண்டு தான் அடியைக் காண்பதாகக் கூறிக் கீழே சென்றார்.



இருவருமே அடிமுடியைக் காண முடியவில்லை. ஆனால் பிரம்மா தான் முடியைக் கண்டதாகப் பொய் கூறியதுமல்லாமல் தாழம்பூவை சாட்சியும் சொல்ல வைத்தார். பொய்சொன்ன படியால் அவருக்குக் கோயிலே இல்லாமற் போய் விட்டது. மகாவிஷ்ணு தன்னால் முடியாது என்று அடிபணிந்தார் சரணடைந்தார்.

இந்த நேரத்தில் சிவபெருமான் அவர்களுக்கு அருள்புரிந்தார். அவ்வாறு ஜோதியாய் நின்றதே இத் திருக்கார்த்திகை என்றும் சொல்லப்படுகிறது. ஆதலால் ஒளிமயமான இறைவனை இன்றைய திருக்கார்த்திகை நன்னாளில் தீப ஒளியில் தரிசனம் செய்து அவனருளாலே அவன்தாழ் பணிந்து உய்தி பெறுவோமாக.

தெய்வத்தமிழ்ச் சுடர்
இராசையா ஸ்ரீதரன்

# அணு ஆயுத வரைபு தீர்மானம் கைவிடுவதற்கு ஐ.நா. தீர்மானம்

## இந்தியா, அமெரிக்கா எதிர்ப்பு

அணு ஆயுத தயாரிப்பை முற்றிலுமாக கைவிடும் ஐ.நா. பொதுச்சபையின் வரைபு தீர்மானத்தை எதிர்த்து இந்தியா வாக்களித்தது. அமெரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளும் ஐ.நா.வின் இந்த தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன.

என்.பி.டி எனப்படும் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் தொடர்பான ஐ.நா. பொதுச் சபையில் நேற்றுமுன்தினம் வரைபு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதனை ஏற்கும் நாடுகள் எவ்வித நிபந்த னையும் இன்றி தங்கள் அணு ஆயுத தயாரிப்பு வசதிகளை சர்வதேச அணு சக்தி முகமையின் பார்வைக்கு அனுமதிக்க வேண்டும். அணு ஆயுத உற்பத்தியையும் முற்றிலுமாக கைவிட வேண்டும்.


முற்றிலும் அணு ஆயுதம் இல்லாத உலகை எட்டும் நடவடிக்கையாக ஐ.நா. பொது அவையில் இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டது. 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. அவையில் முன் எப்போதும் இல்லாத அளவாக 169 நாடுகள் இத்தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரேல் உட்பட 7 நாடுகள் இத்தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன. சீனா, பூட்டான், பிரான்ஸ், பிரிட்டன் உட்பட 5 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்தன. 12 நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஐ.நா. பொதுச் சபை கூட்டத்துக்கு வரவில்லை.

வல்லரசு நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் ஏற்கனவே அணு ஆயுதங்களை பெருமளவில் தயாரித்து வைத்துக் கொண்டுள்ள நிலையில் பிற நாடுகள் ஆயுதம் தயாரிக்கக் கூடாது என்று கூறுவதை ஏற்க முடியாது என்பதே இந்த விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடாகவுள்ளது.

**உலகச் செய்திகள்**

# எயிட்ஸ் நோயின் தாக்கத்தை கண்டறிய நீண்டகாலம் எடுக்கும்

## ஆய்வில் தகவல்



எயிட்ஸ் நோயை உருவாக்கும் எச்.ஐ.வி. கிருமிகள் உடலில் புகுந்து சில ஆண்டுகளுக்கு பிறகு எயிட்ஸ் நோயை ஏற்படுத்துகின்றன.

சமீப காலமாக இந்த கிருமிகள் உடலில் புகுந்து எயிட்ஸ் நோயை உருவாக்குவதில் காலதாமதமாகி வருகிறது. ஆரம்ப கட்டத்தில் கிருமிகள் புகுந்த சில ஆண்டுகளிலேயே நோய் உருவானது. ஆனால் இப்போது மேலும் இந்த நோய் உருவாவதற்கு மேலும் சில ஆண்டுகள் ஆகிறது.

இதுதொடர்பாக விஞ்ஞானிகள் குழு ஒன்று ஆய்வு செய்தது. இங்கிலாந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆபிரிக்காவில் உள்ள போட்ஸ்வானா நாட்டைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான எயிட்ஸ் பாதித்த பெண்களை ஆய்வு செய்தனர். அவர்களுக்கு கிருமி புகுந்து நீண்ட காலத்திற்கு பிறகே நோய் உருவாகி இருந்தது.

அந்த எயிட்ஸ் கிருமியை ஆய்வு செய்தபோது எயிட்ஸ் கிருமியின் வீரியம் இழந்திருப்பது தெரிய வந்தது. எயிட்ஸ் கிருமி தான் உ்யிர் வாழ்வதற்காக ஏற்படுத்திக்கொள்ளும் உயிரியல் மாற்றத்தின் காரணமாக அவை வீரியம் இழந்திருப்பதாக விஞ்ஞானிகள் கூறினார்கள்.

# போகோஹறரம் தாக்குதல்; 150 இற்கும் மேற்பட்டோர் பலி



நைஜீரியாவில் போகோ ஹரம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 150இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

நைஜீரியா நாட்டின் வடகிழக்கு பகுதிகளில் அமைந்த டமாடுரு நகரில் போகோ ஹரம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது குறித்து அந்நாட்டு பொலிஸ்துறையின் செய்தித் தொடர்பாளர் இம்மானுவேல் ஒஜக்வு கூறும்போது, கடந்த திங்கட்கிழமை போகோ ஹரம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை அடுத்து நகரில் உள்ள சிறப்பு மருத்துவமனையில் 115 உடல்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அவர்கள் பொதுமக்களா அல்லது ஊடுருவல்காரர்களா என்பது குறித்து தெளிவாகத் தெரியவில்லை. 115 பேரும் சாதாரண குடிமக்கள் போன்று உடை அணிந்து இருந்தனர். தாக்குதலுக்கு உள்ளாகி பலியானவர்களில் இரு மருத்துவர்கள், யோப் நகர மத்திய பாலி தொழில்நுட்ப ஊழியர் மற்றும் அவரது இரு குழந்தைகளும் அடங்குவர். 6 இராணுவ வீரர்கள் மற்றும் 38 பொலிசாரும் தாக்குதலில் பலியாகியுள்ளனர் என்று அவர் கூறியுள்ளார்.

# எயிட்ஸ் நோயால்பாதித்த தமிழ் நடிகையின் நிலை





நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் தர்கா அருகே ஈ, எறும்புகள் மொய்க்க சுமார் ஆறு நாட்கள் ஒரு பெண் அனாதையாகக் கிடந்தார். அடையாளம் தெரிந்த சிலருக்கு மட்டும் அந்தப் பெண் ஒரு முன்னாள் தமிழ் சினிமா நடிகை என்பது தெரிய வந்தது.

எயிட்ஸ் நோய் அவரது இளமையை உருக்குலைத்துவிட்ட நிலையில், கேட்க ஆளின்றிக் கிடந்த அந்தப் பெண், சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் சினிமாக்களில் கதாநாயகியாக வலம் வந்த நடிகை நிஷா என்ற நூருன்னிசா

'டிக்..டிக்..டிக்..', 'ராகவேந்திரா', 'கல்யாண அகதிகள்', 'இளமை இதோ இதோ', 'முயலுக்கு மூணுகால்,' 'மானாமதுரை மல்லி', 'எனக்காகக் காத்திரு' போன்ற சில படங்களில் ஹீரோயினாக நடித்த நிஷாவின் பிறந்த ஊரே நாகூர்தான் என்பது இன்னொரு அதிர்ச்சிச் செய்தி. அவரது அப்பா, பெரியப்பா, அத்தை என ஓர் உறவினர் பட்டாளமே அந்த ஊரில் வசதியுடன் வாழ்ந்து வருவது, அதைவிட அதிர்ச்சியான செய்தி.

இவரைப் பற்றிய செய்திகள் சில தினங்களுக்கு முன்னர் சமூக வலைத்தளங்களில் பரவின. நாகை மாவட்டத்தைச் சேர்ந்த சில உள்ளூர் செய்திகளிலும் இந்த சோகக் கதை ஒளிபரப்பாகியது.

இந்நிலையில், இந்த செய்தி பற்றி அறிந்த தேசிய மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினரான நீதிபதி முருகேசன் இந்த பிரச்சினையை தேசிய மனித உரிமை ஆணையத்தின் 'சுவோ மோட்டோ'வாக (தாமாக முன்வந்து தீர்த்து வைக்க நினைக்கும் பிரச்சனையை கையில் எடுத்துள்ளார்.

# அதிகார மையத்தை தட்டியெழுப்பிய மோடிக்கு ஒபாமா பாராட்டு

இந்தியாவில் நீண்ட காலமாக முடங்கியிருந்த அதிகார மையத்தை பிரதமர் நரேந்திர மோடி தட்டியெழுப்பிதாக அவருக்கு அமெரிக்க அதிபர் ஒபாமா பாராட்டு தெரிவித்துள்ளார்.

வொஷிங்டனில் நடந்த வணிக வட்டமேசை கூட்டத்தில் அமெரிக்க அதிபர் ஒபாமாவுடன் அந்நாட்டின் முக்கிய கார்ப்பரேட் நிறுவன தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் அமெரிக்க பொருளாதாரத்தின் சூழல் மற்றும் சர்வதேச நாடுகளின் பொருளாதார நிலைமையைப் பற்றி அவர்கள் விவாதித்தனர். அப்போது இந்தியாவில் புதிதாக பதவியேற்றிருக்கும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் செயற்பாடுகள் குறித்தும் பேசப்பட்டது.



அப்போது பேசிய அமெரிக்க அதிபர் ஒபாமா, "இந்தியாவில் நீண்ட காலமாக முடங்கிக் கிடந்த அதிகார மையத்தை தட்டி எழுப்பிய நரேந்திர மோடியின் செயல்கள் என்னை வியக்க வைக்கிறது. ஆனால் இதில் மோடி எந்தளவு வெற்றி பெறப் போகிறார் என்பதை நீண்ட கால அளவில் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்" என்றார்.

# இரகசியமாக செயற்படுகிறது லிபியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ்.



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈராக் மற்றும் சிரியா நாடுகளில் செயற்பட்டு வருகிறார்கள். இந்த இரு நாடுகளிலும் சில பகுதிகளை அவர்கள் கைப்பற்றி வைத்துள்ளனர். அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை தனி நாடாக அறிவித்து இஸ்லாமிய தேசம் என்று பெயரிட்டுள்ளனர்.

மேலும் இந்த நாட்டுடன் மற்ற நாடுகளின் பெரும் நிலபரப்புகளை இணைத்து அகண்ட இஸ்லாமிய தேசம் உருவாக்கப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

அரபு நாடுகள் மற்றும் ஆபிரிக்காவில் உள்ள நாடுகள் ஆகியவற்றிலும் ஐரோப்பாவின் சில நாடுகளையும் இஸ்லாமிய தேசத்துடன் இணைக்க வேண்டும் என்பது அவர்களுடைய திட்டமாகும்.

இந்த நிலையில் ஆபிரிக்க நாடான லிபியாவிலும் இப்போது ஐ.எஸ். தீவிரவாதிகள் செயற்படுவது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தீவிரவாதிகள் இயக்கம் ஒன்று அங்கு செயற்பட்டு வந்தது. லிபியாவில் கடாபி ஆட்சி முடிவுக்கு வந்ததும் அந்த தீவிரவாத படையினர் சிரியாவுக்குச்சென்று சிரிய அரசுக்கு எதிராக போரிட்டன. அவர்கள் பின்னர் ஐ.எஸ். தீவிரவாதிகள் இயக்கத்தில் சேர்ந்தனர். அந்த தீவிரவாதிகள் மீண்டும் லிபியாவுக்கு திரும்பி ஐ.எஸ். தீவிரவாதிகள் இயக்கத்தை தொடங்கியுள்ளனர்.

கிழக்கு லிபியாவில் உள்ள மலைப்பகுதியில் அவர்கள் இரகசிய பயிற்சி முகாம் அமைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. லிபியாவை முற்றிலும் கைப்பற்றி அதையும் இஸ்லாமிய தேசத்துடன் இணைக்கும் திட்டத்துடன் அவர்கள் பயிற்சி முகாம் அமைதிருப்பதாக தெரிய வந்துள்ளது.

# உணர்ச்சி பேச்சு அபிவிருத்திக்கு பதிலாக அழிவையே தேடித்தரும்

## கண்டாவளையில் சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



மக்கள் தவறான கருத்துப் போதைகளுக்கு அடிமையாகிவிட்டால் அந்த மக்களுக்கு அழிவைத் தவிர வேறெதுவும் கிடைப்பதில்லை. இவ்வாறான கருத்துப் போதைகளை ஏற்றுபவர்களால் மக்களுக்கு ஆபத்தும் அழிவுமே ஏற்படுகிறது நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தில் கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தவறான கருத்துப் போதைகள் ஏற்றுபவர்களால் மக்களுக்கு ஆபத்தும் அழிவுமே ஏற்படுகிறது. போதை ஏறும் போது சுகமாகதான் இருக்கும் ஆனால் அதனால் ஏற்படுகின்ற ஆபத்தும் அழிவும் மிகவும் பாரதூரமானதாகவே இருக்கும்.

இதே போன்றுதான் கருத்துப் போதையும் உணர்ச்சி வசப்பட்டு இரத்தம் சூடேற உசுப்பேத்தி இனவாதமாக பேசுகின்ற போது மிகவும் சுகமாகவும் இனிமையாகவும்தான் இருக்கும். ஆனால் பின்னால் ஏற்படப்போகின்ற பாதிப்பு மிகவும் பாரதூரமானதாக இருக்கும். கஞ்சா, அபின், ஹெரோயின் போன்ற போதை பொருட்களை விட தவறான கருத்து போதையே மிக மிக ஆபத்தானது. இந்த போதைப் பொருட்கள் பயன்படுத்துகின்ற தனி நபரையே அழிவுக்கு இட்டுச் செல்லும் ஆனால் தவறான கருத்துப் போதை ஒரு சமூகத்தையோ அல்லது ஒரு இனத்தையோ அழிவுக்கு கொண்டு சென்று விடும்.

எனவேதான் மக்கள் போதையை ஏற்றுகின்ற இவ்வாறான கருத்துக்களுக்கு அடிமையாகி விடா மல் மக்களுக்கு மருந்தாக இருக் கின்ற கருத்துக்களுக்கு இடமளித்து முன்னேற்றகரமான எதிர்காலத்தை நோக்கி பயணிக்க வேண்டும். தவறான கருத்துக்கள் ஒரு இனத்தை அல்லது ஒரு சமூகத்தை படிப்படியாக அழிந்து போவது தெரியாமல் அழித்து விடும்.

தமிழ் மக்கள் மத்தியில் இந்தக் கருத்துப் போதைகளுக்கு மக்களை அடியமையாக்குகின்ற சில அரசியல் வாதிகளும், சில பத்திரிகைகளும் தொடர்ந்தும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இது தமிழ்ச் சமூகத்தை ஒரு ஆபத்தான சூழலை நோக்கி தள்ளுகின்றன எனத்தெரிந்தும் குறுகிய இலாப நோக்கங்களுக்காக தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. என்றார்.

கண்டாவளைப்பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 105 பயனாளிகளுக்கு சிறு வியாபாரம், விவசாயம், கடற்றொழில்,மற்றும் சிறுதொழில் முயற்சிகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் விசேட நிதி ஒதுக்கீடாக நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அவர்களுக்கு கிடைத்த நூறு மில்லியன் ரூபா நிதியிலிருந்து இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கரைச்சிக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் அமிர்தலிங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர் பெற்றோர்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

### இந்திய...

தற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டுள்ளோம் என்று அவர்களுக்கு உறுதிமொழி வழங்கியதை அடுத்து அந்த மீனவர்களின் போராட்டம் கைவிடப்பட்டதாக பிரதித் துணைத் தூதுவர் மூர்த்தி தெரிவித்தார். இன்று வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் மேற்படி இந்திய மீனவர்கள் வழக்கு விசாரணைக்காக முற்படுத்தப்படவுள்ளனர்.

### பொன்சேகாவை...

விரும்பாவிடில் சத்தியப் பிரமாணம் எடுக்காது இருந்திருக்க வேண்டும். (சத்தியபிரமாணம் எடுத்த நீங்கள் அதன் வசன அமைப்புகள் அரசியல் அமைபபுக்கு முரணாக இருக்கிறதா என்பதை தெளிவாக பார்க்கவேண்டும்.

சிவாஜிலிங்கத்தின் இனப்படுகொலை தொடர்பான தீர்மானத்தை நன்கு ஆராய்ந்து அரசியலமைப்புக்கு முரணான வகையில் அதனை மீண்டும் அவையில் பிரேரிக்கப்படும். அதற்கு காலஅவகாசம் வழங்குவது தான் சரியென நான் கருதுகிறேன். என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அன்று சரத்பொன்சேகாவை தேர்தலில் ஆதரித்தவர்கள் நீங்கள் இன்று ஆளுநரை இராணுவ அதிகாரி என்கிறீர்கள் இது சரியானதா என சிந்திக்கவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் தர்மபாலா தெரிவித்தார். (இ)

### போக்குவரத்து...

எதிர்வரும் ஒன்பதாம் திகதி வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களின் அரச அதிபர்கள் தனியார், இலங்கை போக்குவரத்து சபையினர் மற்றும் உரிய அதிகாரிகள் ஆகியோருடன் ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டு ஒரு நிரந்தரத் தீர்வுக்கு வருவது எனவும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது ஈ.பி.டி.பி. யின் நாடாளுமன்ற உறுப் பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலை வருமான முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ் வரன், முல்லைத்தீவு அரச அதிபர் வேதநாயகன், வட பிராந்திய இலங்கை போக்குவரத்து சபையின் பொது முகாமையாளர் அஸ்வர், பொலிஸ் அதி காரிகள், முல்லைத்தீவு கிளிநொச்சி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் கிளிநொச்சி இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### வடக்கு...

கள் தமது குரலை எழுப்பு ஆதரவு தெரிவித்தனர்.

அதுமட்டுமன்றி முன்னாள் வடமாகாணசபை செயலாளரின் பதவி நீக்கம் தொடர்பில் பல கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. அவை குறித்து எமக்கு எதுவும் தெரியாது நாம் இங்கு ஏன்வருகிறோம் என எமக்கு புரியவில்லை. மக்கள் என்ன செய்துள்ளீர்கள் என கேட்டால் அதற்கு பதில் சொல்லமுடியாது என பிரதி அவைத தலைவரும், விந்தனும் முதலமைச்சர் மீது கேள்விகளைத் தொடுத்தனர்.

இதற்காக நாம் பலரை வேலைக்கு அமர்த்த வேண்டியுள்ளது. அவ்வாறு செய்து அவற்றை நாம் உங்களுக்கு தெரிவிப்போம் என முதலமைச்சரின் பதிலுக்கு பல உறுப்பினர்களும் பெரும் எதிர்ப்பு கோசம் எழுப்பிய நிலையில் அவற்றைத் தடுக்கும் வகையில் தேனீர் இடைவேளைக்கு அவையை ஒத்திவைத்தார் அவைத்தலைவர். (இ)

### முஸ்லிம்...

ளிக்கிழமை நடைபெறவுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இடம்பெறவுள்ள இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூவ் ஹக்கீம், செயலாளர் நாயகம் ஹஸனலி உட்பட கட்சியின் அனைத்துப் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். ஆளும் கட்சியின் பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற தீர்மானத்துக்கு இன்னும் வராத நிலையில் கடந்த சனிக்கிமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது. இதன் தொடராகவே நாளைய சந்திப்பும் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சந்திப்பில் எட்டப்படுகின்ற தீர்மானங்களைப் பொறுத்தே தொடர்ந்தும் அரசுக்கான ஆதரவை வழங்குவதா இல்லையா என்ற முடிவுக்கு கட்சி வரவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# அவுஸ்ரேலியாவில் புகலிடம் கோரியவர்களுக்கு தற்காலிக பாதுகாப்பு விசா

## சட்ட மூலத்தில் திருத்தம்

தற்காலிக பாதுகாப்பு விசாவை மீண்டும் அறிமுகம் செய்யும் சட்டத்தை செனட்டில் வெற்றிபெறச் செய்யும் நோக்கில், ஏற்கனவே முன்வைத்த சட்டமூலத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார். அத்துடன், செனட் இந்த புதிய மாற்றத்தை ஏற்றால் வேலைசெய்ய உரிமை மறுக்கப்பட்ட புகலிட கோரிக்கையாளர்கள் வேலை செய்ய அனுமதிக்கப்படுவர் உள்ளிட்ட பல சலுகைகளை வழங்கத் தயார் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அவுஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் நடந்த சூடான விவாதத்தினை அடுத்து இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் வருகின்ற நத்தார் பெருநாளுக்கு முன்பதாக இந்த பிரேரணை வெற்றி பெற்றால் புகலிடதாரிகளுக்கு தொழில் செய்யும் உரிமை வழங்கப்படும். மனிதநேய அடிப்படையில் புகலிடக். கோரிக்கையாளர்களை ஏற்றுக்கொள்ளப்படும் என பல் முக்கியமான விடயங்களை உள்ளடக்கி உள்ளதால் இந்த சட்ட மூலம் செனட் சபையில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனுள் பாமர் கட்சியுடன் ஒத்துக் கொண்டவைகளும் இச் சட்ட மாற்றத்தில் உள்ளடங்கியுள்ளது. 2013 யூலை 19 முதல் 2013 யூலை 31ஆம் திகதிக்குள் வந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் நவ்ரு தீவுக்கு அனுப்பி வைக்கப்பட மாட்டார்கள். அவர்களின் கோரிக்கைகளும் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படும். இதன் காரணமாக 100 க்கு அதிகமான சிறுவர்களும் விடுவிக்கப்படுவர் எனவும், சிலர் நத்தார் பெருநாளுக்கு முன்னரே விடுவிக்கப்படலாம் எனவும் மொரிசன் தெரிவித்துள்ளார்.

# தற்காலிக ஊழியர்கள் 468 பேருக்கு நிரந்தர நியமனம்

தேசிய வீடமைப்பு அதிகாரசபையில் பணியாற்றிய தற்காலிக ஊழியர்கள் 468 பேருக்கு நேற்று நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நிர்மாணத்துறை- பொறியியல் சேவைகள்- வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் அதிகாரசபையில் நாள் சம்பளம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய ஆண், பெண் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

மகிந்த சிந்தனை தூர நோக்கு தேசிய திட்டத்தின் கீழ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த வரவு செலவு 2015 முன்மொழிவில் அரச சேவையில் 180 நாட்களுக்கு மேல் பணியாற்றியோருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாளிகாவத்தை - பிரதீபா மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நிர்மாணத்துறை- பொறியியல் சேவைகள்- வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் பிரதி அமைச்சர் லசந்த அலகியவன்ன- அமைச்சின் செயலாளர் பி.எச்.எல். விமலசிறி பெரேரா வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் ஜயந்த சமரவீர மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மறுக்கப்பட்ட...

கோழையைப் போன்று வாழ்வதை விடவும் உண்மையை உறுதி செய்ய உயிரைத் தியாகம் செய்யவும் தயார்.

ஜனநாயகத்தை நிலைநாட்டுதல் நல்லாட்சியை ஏற்படுத்தல் ஆகியன தொடர்பிலேயே சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி வலியுறுத்தியிருந்தது. அதனை நான் ஏற்றுக்கொண்டேன். சரத் பொன்சேகாவிற்கு மறுக்கப்பட்டுள்ள சகல வரப்பிரசாதங்களும் மீளவும் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

### தூக்கி...

முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்ததுடன் இனப்படு கொலைக்கான ஆதாரங்கள் இதில் இல்லை. எனவே பின்னர் இதனை பிரேரிக்கலாம் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பிரேரியுங்கள் என அவர் தெரிவித்தார். இந்த நிலையில் அவை ஒத்திவைக்கப்பட்ட வேளையில் தனது பிரேரணை முன்மொழியப்படுவது தொடர்பில் வாக்கெடுப்புக்கு விடுமாறு சிவாஜிலிங்கம் கேட்ட நிலையில் அவைத்தலைவரினால் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் ஆத்திரம் அடைந்த சிவாஜிலிங்கம் அவைத்தலைவரை மிரட்டியதுடன் வெளியில் செல்லவிடாது தடுத்ததுடன் அவை நடுவே செங்கோலின் இருக்கையில் குறுக்காக இருந்த செங்கோலை தூக்கி அடித்து நொருக்கியதுடன் பெரும் சத்தத்துடன் கூப்பாடு போட்டு அவையை ஒரு சண்டைக்களமாக மாற்றியதுடன் அவைத்தலைவர் தலையைக் குனிந்தவாறு செங்கோலையும் எதிர்பார்க்காது அவையில் இருந்து நழுவிச் சென்றார்.செங்கோலை கொண்டுவரும் சேவகனோ உடைந்த சொங்கோலை ஒருவாறு தூக்கிக் கொண்டு அவையை விட்டு வெளியேற அங்கு நின்ற கூட்டமைப்பின் உறுப்பினர்களிடையே பெரும் வாய்த்தர்க்கம் மூண்டதுடன் அவை கலைந்தது

எனினும் சிவாஜிலிங்கத்தின் இச் செயற்பாட்டை பல ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஆமோதித்ததுடன் அவரை வாழ்த்தியதையும். காணக்கூடியதாக இருந்தது இப்பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடுமாறு கோரியநிலையில் முதலமைச்சர் இலாவகமாக அவையில் இருந்து வெளியேறியிருந்தார்.

உயர்ந்த சபைஇது எனக் கூறிக்கொண்டும் எல்லாவற்றிற்கும் முன்மொதிரியானதாக செயற்படவேண்டும். எனத் தெரிவித்துவரும் நிலையில் எந்த ஒரு மாகாணசபையில் இடம்பெறாத மிகக் காடைத்தனமான ஒரு செயல் மகாணசபையில் அரங்கேறியிருப்பது பெரும் வெட்கம் அளிக்கும் செயல் என சில மாகாணசபை உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர். (இ)

# ஆசிரியர்கள் திரண்டு போராட்டம் மாகாண சபை முன்பாக நேற்று



(யாழ்ப்பாணம்)

தற்போது கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவர்களாகப் பயிற்சி பெற்று வரும் ஆசிரிய உதவியாளர்கள் மற்றும் பயிற்சியை முடித்து வெளியேறி வெளிமாவட்டங்களில் கடமையில் உள்ள ஆசிரிய உதவியாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனக் கோரி வடமாகாண சபையின் முன் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்டகாலமாக குறைந்த ஊதியத்துடன் சேவை புரிந்த தமக்கு தற்போது சகல ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகின்ற மேலதிக கொடுப்பனவாகிய 3 ஆயிரம் ரூபாவினை எமக்கும் வழங்க வேண்டும்.

நியமனம் வழங்கப்பட்ட 12.11.2009 ஆம் ஆண்டு முதல் ஆசிரிய சேவை 3-II இற்கு உள்ளீர்ப்புச் செய்ய வேண்டும் எனவும், பரீட்சைப் பெறுபேறுகள் 7 மாதமாகியும் இதுவரை வெளியிடப்படாத நிலையில் நாம் சேவை செய்கின்றோம். அதனை விரைவுபடுத்த வேண்டும் எனக் கோரியும், பயிற்சிக் கலாசாலையில் கற்கின்ற 550 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், வெளிமாவட்டங்களில் 6 கல்வி வலயங்களில் கற்பிக்கின்ற பயிற்சிக் கலாசாலையை விட்டு வெளியேறிய, இதுவரை பரீட்சைப் பெறுபேறு கிடைக்காத 450 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமது வாழ்வாதாரத்திற்கு போதாத சம்பளமே வழங்கப்படுவதாகவும், தாம் அனைவரும் குடும்பகாரர்கள் எனவும், நிரந்தர நியமனம் வழங்கப்படுமெனக் கூறியமையாலேயே வெளிமாவட்டங்களுக்கும் நாம் சேவை செய்யச் சென்றோம். தற்போது இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தின்படி சகல அரச ஊழியர்களுக்குமான அடிப்படைச் சம்பளம் 15 ஆயிரம் ரூபா ஆக்கப்பட வேண்டும். எனவே அவ்வாறே தமக்கும் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் தமது பிரச்சினைகளை ஊடகங்களுக்கு வெளிப்படுத்திய நிலையில்,

இது விடயம் குறித்த வடமாகாண சபை அமர்வின் பிற்பாடு இவர்களின் பிரதிநிதிகளுடன் கல்வி அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் கலந்துரையாடி இவர்களுக்கான தீர்வினைப் பெற்றுத் தருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தொற்று நோய் தாக்கம் முன்னணியில் யாழ்ப்பாணம்

## சுகாதார அமைச்சர் கவலை

இலங்கையில் தொற்றுநோய்கள் அதிகமாக காணப்படும் மாவட்டங்களில் முதலாவது இடத்தில் இருப்பது யாழ். மாவட்டம் என தெரிவித்தார் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்.

வடமாகாண சபையல் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 5 ஆண்டுகளில்கொழும்பு மாவட்டத்துடன் ஒப்பிடுகையில் பெரிய தாக்கம் இங்குான் உள்ளது.

கடந்த ஆண்டில் 3:50 பேர் நெருப்புக்காய்ச்சலாலும், 489பேர் வயிற்றோட்டத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றுக்கு காரணம் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களே இவர்கள் தான் சுகாதாரத்துறை பேணவேண்டியவர்கள், மக்களும் நீரை கொதித்தாறிய பின் தான் அருந்த வேண்டும், இதனால்தான் நாம் ஐஙகிறீமையும் பரிசோதித்தோம்.

ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்களின் பிரச்சினை தொடர்பில் பல காரணங்கள் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் ஐஸ்கிறீமில் கிருமித் தொற்று உள்ளதாக மட்டும்தான் நாம் சொன்னோம் ஆனால் ஊடகம் ஒன்று அதை மலத்தொற்று என செய்தி போட்டுள்ளது.

இதற்கும் எமக்கும் தொடர்பில்லை. அது குறித்து சுகாதார பணிப்பாளர் ஊடாக மறுப்புத் தெரிவித்துள்ளோம் என அவர் பல காரணங்களை அடுக்கிக் கொண்டே சென்றார். (இ)

# மேல் மாகாண சபையில் நிறைவேறியது பட்ஜட்

மேல் மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 14 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 55 வாக்குகளும் எதிராக 41 வாக்குகளும் கிடைத்தன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி அதிகாரத்தில் உள்ள மேல் மாகாண சபையில் ஆளும் கட்சி 60 உறுப்பினர்களை கொண்டுள்ளது.

ஆளும் கூட்டணியில் அங்கம் வகித்த ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு உறுப்பி னர்கள் நேற்று சபைக்கு வருகை தரவில்லை.

இதனைத் தவிர ஆளும் கட்சியின் உறுப்பினரான ரஞ்சித் ரூபசிங்கவும் நேற்றுச் சபையில் இருக்கவில்லை.

அத்துடன் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள லங்கா சமசமாஜக் கட்சியின் உறுப்பினர் கீர்த்தி காரியவசம் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தமை இங்கு விசேட அம்சமாகும்.

# உரும்பிராயில் விபத்து; மூவர் படுகாயம்

உரும்பிராய் மருதனார்மடம் வீதியில் உள்ள உரும்பிராய் விளாத்தியடி பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரப் பெட்டியுடன் மோதுண்ட மூவர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் தெல்லிப்பளை மற்றும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் சேர்க்கப் பட்டனர்.

பிரதான போக்குவரத்து நிறைந்த வீதியில் கடந்த மூன்று நாள்களாக குறிப்பிட்ட உழவு இயந்திரப் பெட்டி எந்தவகையான வீதிப் பாதுகாப்பும் செய்யாது வீதியில் அரிந்த சிமெந்துக் கற்கள் நிரப்பிய நிலையில் நிறுத்தப்பட்டிருந்தது.

எதிரே வரும் வாகனங்களுக்கு எந்த வகையான வெளிச்சமும் இன்றி நிறுத்தப்பட்டிருந்த இந்த உழவு இயந்திரப் பெட்டியுடன் கொட்டும் மழையில் இரவு வேளையில் வந்த மோட்டார் சைக்கிள்கள் மோதுண்டு இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் அதில் பயணித்தவர்களும் காயங்களுக்கும் ஆளாகியுள்ளார்கள்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற விபத்தைத் தொடர்ந்து பொதுமக்கள் கோப்பாய் பொலிஸாருக்கு கொடுத்த தகவலைத் தெர்டர்ந்து குறிப்பிட்ட உழவு இயந்திரப் பெட்டி அந்த இடத்தில் இருந்து அகற்றப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (48)

# பாப்பரசரின் பாதுகாப்பு அதிகாரிகள் மடுவுக்கு நேற்று திடீர் விஜயம்



பரிசுத்த பாப்பரசரின் விசேட பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் நேற்றுக் காலை மன்னார் மடு திருத்தலத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர். குறித்த குழுவில் பாப்பரசரின் வழிபாடுகளுக்கான அருட்தந்தையர்கள் மற்றும் பாப்பரசரின் தனிப்பட்ட பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளே வருகை தந்திருந்தனர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 13 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரும் பரிசுத்த பாப்பரசர் 14 ஆம் திகதி மாலை மடு திருத்தலத்திற்கு வருகை தந்து விசேட திருப்பலி ஆராதனையை நிறைவேற்றவுள்ளார்.

மடுத்திருத்தலத்தில் மடுமாத திருச்சொரூப ஆசீர்வாதத்தை மேற்கொள்ளும் பரிசுத்த பாப்பரசர் நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் விசேட ஆசீர் வழங்கவுள்ளார்.

இந்த நிலையில் பரிசுத்த பாப்பரசரின் மன்னார் மடு திருத்தலத்தின் வருகையை முன்னிட்டு மடு திருத்தலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள், பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆராய்வதற்காக பரிசுத்த பாப்பரசரின் விசேட குழுவினர் நேற்றுக் காலை மன்னார் மடு திருத்தலத்திற்குச் சென்றிருந்தனர்.


# மைத்திரிக்கு இரகசிய ஆதரவு; கூட்டமைப்பிடம் கோருகிறார் சந்திரிக்கா

(கொழும்பு)

ஆட்சி மாற்றத்திற்காக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பொது வேட்பாளருக்கான ஆதரவினை பகிரங்கமாக வழங்க வேண்டாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிடம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க கோரிக்கை விடுத்துள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அத்துடன் சந்திரிக்காவின் இந்தக் கோரிக்கையினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்த பத்திரிகை செய்தியில் இரகசியமான முறையில் ஆதரவளிக்குமாறு பொது வேட்பாளர் தரப்பில்கோரப்பட்டதாகவும் அதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆதரவு வழங்குவது பகிரங்கமாக ஆதரவளிக்க வேண்டும் என ஒரு தரப்பினரும் இரகசியமாக ஆதரவளிக்க வேண்டுமென மற்றுமொரு தரப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரி வருகின்றனர்.

இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக பொது வேட்பாளருக்கு ஆதரவளித்தால் அது தெற்கு வாக்குகளைப் பெற்றுக் கொள்வதில் சிக்கலை ஏற்படுத்தி விடும். பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் ஜாதிக ஹெல உறுமயவுடன் தனியான உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டார்.

அதே போன்றதொரு உடன்படிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் கைச்சாத்திட உள்ளார் என சிங்களப் பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



வேலணை பிரதேச சபையின் கலாசார பேரவையால் நடாத்தப்பட்ட கலாசார பெருவிழா 2014 நேற்று பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது விருந்தினர்களை வரவேற்பதனையும், 'தென்தீபன்' நூலினை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சு. அருமைநாயகம் வெளியிட்டு வைப்பதையும், கலந்துகொண்ட விருந்தினர்களையும் காணலாம். (21)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.